நல்லூர் இளைநூலகம்.

Registered as a Newspaper பக்கங்கள்: 12 விலை: ரூ. 6/-

# ஈழநாதம்

வெள்ளிமஞ்சரி

## வடக்கிற்கு அனுப்பிய பணம் தெற்கில் உபயோகம்

பிரிட்டிஷ் அரசாங்கத்தால் வடக்கில் ஊனமுற்றவர்களின் புனர்வாழ்வுக்கென அனுப்பிவைக்கப்பட்ட பெருந்தொகை பணம் கொழும்பில் உள்ள ஜெய்பூர் நிறுவனத்தின் தலைமைக் காரியாலய நிர்வாகப் பிரிவிற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. சமீபத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் வடபகுதியில் இடம்பெறும் (11ஆம் பக்கம் பார்க்க)

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆடி 27 12-08-94 வெள்ளிக்கிழமை ஓசை 175

# வடக்கு - கிழக்கு இணைப்பை ஒருபோதும் ஏற்கமாட்டேன்!

## சந்திரிகா குமாரணதுங்க தெரிவிப்பு

வடக்கு - கிழக்கு இணைப்பை தான் ஒரு போதும் ஏற்கப் போவதில்லை எனவும், ஆனால் மாற்றியமைக்கப்பட்ட எல்லைகளுடனான பகுதிகளுடன் தமிழர்களுக்கு பெருமளவிலான தன்னாட்சி வழங்கப்படும் எனவும் நேற்றுக் காலை கொழும்பில் நடைபெற்ற வெளிநாட்டு, உள்நாட்டு செய்தியாளர் மாநாட்டில் திருமதி சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்தார்.

மேலும் அவர் அம் மாநாட்டில் கூறுகையில்: வடக்கு கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வு காண வாக்காளர்களின் ஒப்புதலையும் இணக்கத்தையும் பொதுஜன முன்னணி கேட்டிருப்பதாகவும், தேர்தலில் வெற்றியீட்டினால் தான் நிச்சயம் வட மாகாணத்திற்குச் சென்று மக்களையும் சம்பந்தப்பட்டவர்களையும் சந்தித்து கலந்துரையாடி இந்தப் பிரச்சினைக்கு சமாதான தீர்வு காணப்போவதாகவும் (11ஆம் பக்கம் பார்க்க)

## அராலி கடற்பரப்பில் 2 மீனவரைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

அராலீ கடற்பகுதியில் மீன் பிடிக்கச் சென்ற இரு மீனவரைக் கடந்த 7-ம் திகதி முதல் காணவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

தீவகம் தம்பாட்டி பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து நவாலி மயூரன் குடியிருப்பில் தங்கியிருந்த மீனவர்கள் 13 பேர் அராலிக் கடற்பரப்பில் மீன் பிடிக்கச் சென்றதாகவும், நள்ளிரவு 1.00 மணியளவில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டதைத் தொடர்ந்து வள்ளங்கள் கரை திரும்பியதாகவும் ஒரு வள்ளத்தையும் அதில் சென்றவர்களையும் காண (11ஆம் பக்கம் பார்க்க)

## தூதுவராலய பிரதிநிதிகள்; சந்திரிகா சந்திப்பு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரதித் தலைவி சந்திரிகா குமாரணதுங்கா நேற்று நண்பகல் சகல வெளிநாட்டு தூதுவராலய பிரதிநிதிகளையும் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார். தற்போது நாட்டில் நடைபெறும் அரசியல் கொந்தளிப்பு நிலை தொடர்பாகவும், நடைபெறும் வன்முறைகள் குறித்தும் விரிவாக எடுத்துக் கூறியுள்ளார் என்றும் ஐ. தே. க. திட்டமிட்டு வன்முறைகளை மேற்கொண்டு வருவதாக குற்றம் சாட்டினார் என்றும் தெரியவருகிறது.

## வானொலி, தொலைக்காட்சி ஜனாதிபதியின்கீழ் வரும்

(கொழும்பு)

அமைச்சரவையின் நிர்வாகத்தின் கீழ் உள்ள இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம், ரூபவாகினி என்பன விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஜனாதிபதியின் நேரடி கண்காணிப்பின்கீழ் வரும் என தெரியவந்துள்ளது.

இன்று கொண்டுவரும் விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் இவ்விரு அரசாங்க செய்தி தொடர்பு நிறுவனங்களும் ஜனாதிபதியின் நேரடி கண்காணிப்பின்கீழ் கொண்டு வரப்படவுள்ளதாக தெரிய வந்துள்ளது.

## வடக்குகிழக்கு இணைப்பு தமிழீழத்திற்குசமனானது

### ஐலண்ட் பத்திரிகை தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளை இன அடிப்படையில் இணைத்து, கட்டுப்பாடில்லாத அதிகாரங்களை வழங்கினால் அது தமிழீழம் வழங்குவதற்கு சமனாகிவிடுமென ஐலண்ட் பத்திரிகை கருத்து வெளியிட்டுள்ளது.

ஒரு தலைப் பட்சமான சுதந்திரப் பிரகடனத்தை விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் வெளியிடவும் இது (12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் கௌரவமாக வாழ பிரபாகரனே காரணம்

### பொ. ஐ. மு. வேட்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

பிரபாகரன் வடக்கில் நடத்தும் போராட்டத்தினாலேயே இன்று தமிழ் மக்கள் நாடு முழுவதிலும் கௌரவத்துடன் வாழும் நிலைமையைத் தோற்றுவித்துள்ளது என பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர் ரி. சி. ராஜரட்ணம் பம்பலப்பிட்டியில் நடைபெற்ற (11 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ. தே. க. தேர்தலில் தோற்றாலும் ஆட்சியை தொடர ரகசிய திட்டம்

### இராணுவ சட்டத்தை பிரகடனப்படுத்த முயற்சி

பொதுஜன ஐக்கிய முன்னணி தேர்தலில் வெற்றி பெற்றாலும், தாமே தொடர்ந்து ஆட்சியை நடத்த ஐக்கிய தேசியக் கட்சியினர் இரகசியத் திட்டமொன்றினை தீட்டிவருவதாக சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர், மேலும் கூறுகையில், இராணுவ சட்டம் ஒன்றைப் பிரகடனப்படுத்தி அதன் மூலம் ஆட்சியை நீடித்துச் செல்வதற்கும் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவை வீட்டுக் காவலில் வைப்பதற்கும் ஐ.தே.க இரகசிய திட்டமொன்றை தீட்டிவருவதாக தெரிவித்தார்.

இந்நிலையில் பொதுஜன ஐக்கிய முன்னணி தேர்தலில் வெற்றிபெற்றாலும் ஆட்சி கிடைப்பது குறித்த சந்தேகம் பொ. ஐ. மு வின் தலைமைப் பீடத்திற்கு எழுந்துள்ளது என மேலும் அவர் குறிப்பிட்டார்.

## வீரச்சாவு

திருகோணமலை மாவட்டம் உப்பூறல் என்ற இடத்தில் கடந்த ஒன்பதாம் திகதி மதியம் 1.20 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினர் மறைந்திருந்து தாக்கியதில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார். (11ஆம் பக்கம் பார்க்க)



2-ம்லெப். புகழேந்தி (கஜன்)

## பாதுகாப்பைப் பலப்படுத்த பொலிஸ்மாஅதிபர்உத்தரவு

(கொழும்பு))

தேர்தல் நெருங்கி வருகையில் வன்செயல்கள் அதிகரிக்கலாமென்பதால் பொலிசார் பாதுகாப்பை பலப்படுத்துமாறு, பொலிஸ்மா அதிபர், பிரதிப் பொலிஸ்மா அதிபர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

தேர்தல் கூட்டங்கள் நடைபெறும் இடங்களில் கூடிய கவனம் செலுத்துமாறும், பொலிஸ் அதிகாரிகள் தமது பகுதிகளிலேயே இருக்க வேண்டுமென்றும், பொலிஸ் தலைமையத்தின் அனுமதியின்றி குறிப்பிட்ட மாவட்டங்களை விட்டு வெளியேறக் கூடாதென்றும், பொலிஸ்மா அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

## உணவகம்தண்ணீர்பந்தலில் சுகாதாரம் பேணுக

நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தீர்த்த திருவிழா வரை 26 நாட்கள் நடைபெறவுள்ளன. இக் காலத்தில் அங்கு தற்காலிகமாக வியாபார நோக்குடன் அமைக்கப்படும் சகல உணவகங்கள், ஐஸ்கிறீம் தயாரிப்பாளர்கள் மற்றும் சேவை அடிப்படையில் தாக சாந்தி வழங்கும் தொண்டர்கள் தொற்று நோய் பரவாது சகல மட்டத்திலும் சுத்தம் பேணுமாறும் கலப்படம் செய்யப்பட்ட, அசுத்தமான நிலையில் தயாரிக்கப்பட்ட காலாவதியான உணவுப் பொருள் (11 ஆம் பக்கம் பார்க்க

## பல்கலைமாணவர் பகிஷ்கரிப்பு

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களின் போராட்டத்திற்கு ஆதரவாக இன்று கலைப்பீட, மற்றும் விஞ்ஞானபீட மாணவர்கள் விரிவுரைகளை பகிஷ்கரிக்கவுள்ளனர். நேற்றும் இவர்கள் விரிவுரைகளைப் பகிஷ்கரித்திருந்தனர்.

# வரி விளம்பரம்

### மணிக்கூடுகள் தேவை

தரமான மணிக்கூடுகள், கைக்கடிகாரங்கள் வாங்கப்படும். ஆடர்களுக்கு கடிகாரங்கள் திருத்திக் கொடுக்கப்படும் காங்கேசன் - கமலா வாச்வேக்ஸ் உரிமையாளர் தம்பு தேவதாசன், மேல்மாடி (காளிகோவில் முன்பாக) 113 கன்னாதிட்டிவீதி, யாழ்ப்பாணம். (9079)

### ஜோதிடவிஞ்ஞானம்

யுரேனஸ்நெப்ரியூனுடனும், வியாழராகுவும் ஒரே பாகையிலும், சனி செவ்வாய் பார்வைகளாலும் ஆவணி, புரட்டாதியில் தேர்தல் வன்முறைகளும் மோசடிகளும் அரசியல் கொலைகளும் U.N.P தோல்வியால் இனக்கலவரமும் மூளும் ''சத்யா'' கட்டுடை, (9078)

### ஆனந்தம் சியாக்காய்

சிரசின் தனித்துவத்தைப் பேணுவதற்கு கைதடி . சுதேச வைத்திய சங்கத் தலைவர் சிபார்சுப்படி மூலிகைகளுடன் சியாக்காய் சேர்த்து தயாரிக்கப் பெற்றது. ஆனந்தம் சியாக்காய் பவுடர், கேட்டுவாங்கி பயன்பெறவும். (8969)

### ஆட்கள் தேவை

அரியாலை புஸ்பா களஞ்சியத்திற்கு பற்றுச்சீட்டுப் போடுவதற்கும் கணக்குப்பதிவதற்கும் அனுபவமுள்ள பெண் ஒருவர் தேவை. பல சரக்கு கடையில் அனுபவமுள்ள ஆணும் தேவை. தொடர்பு:- புஸ்பா களஞ்சியம், நெடுங்குளம் சந்தி அரியாலை. (9074)

### வாங்குகிறோம்

துப்புரவான வேப்பம் விதை கொள்வனவு செய்கிறோம். தொடர்பு:- மில்க் வைற். (சி-10087)

### வெளிவந்துவிட்டது வியாழ மாற்றம்

PROF.T.சத்தியதாஸன் கணிப்பில். ஏகவிநியோகஸ்தர்கள் ஸ்ரீகாந்புத்தகசாலை-நல்லூர்.மக்மிலன் புத்தகசாலை-யாழ்ப்பாணம். இந்தியா ருடே 1994 ஆண்டு மலர் வெளிவந்துவிட்டது. சிவம் நீதிக்கதைகள் 3,4,5,6 ஆண்டு 5 கணிதம், தமிழ் 94 வினா விடைகள் (சி-10101)

### வேப்பமரம் தறிப்பதற்கு கூறுவிலை கோரல்

விபரங்களுக்கு:- அதிபர், மகளிர் மகா வித்தியாலயம், சாவகச்சேரி. 17-ம் திகதிக்கு முன் விரும்பத்தக்கது. பாடசாலை அபிவிருத்தி சபை. (9082)

### உதைபந்தாட்ட போட்டி

வலி. மேற்கு உதைபந்தாட்ட சங்கத்தால் நடாத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் கால் இறுதி ஆட்டங்கள் இன்று மாலை மூன்று மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயா மைதானத்தில் நடைபெறவுள்ளது. முதலாவது கால் இறுதிப் போட்டியில் காங்கேசன்துறை யங்றோயல் வி. கழகத்தை எதிர்த்து வட்டு. வி. கழகமும் இரண்டாவது கால் இறுதிப் போட்டியில் இளவாலை யங்கென்றிஸ் வி. கழகத்தை எதிர்த்து சுன்னாகம் ஸ்கந்தா வி. கழகமும் விளையாடவுள்ளன.

---

மக்கள் அபிமானம் பெற
விரும்புபவர்களே !

## நல்லைக் கந்தனின் உற்சவத்தால் உச்ச பலன் கிடைக்க வேண்டுமா!

பல கோடி கண்களைக் கவரும்
பல கோடி உள்ளங்கள் நாடும்
உங்கள் எண்ணங்கள் ஈடேறும்

**எங்கள் தொலைக்காட்சியில்**
**விளம்பரம் செய்யுங்கள் !!!**

உற்சவ காலத்தில்;

நல்லூர் ஆலய உற்சவ காலப் பிரதேசத்திற்குள் பல நூற்றுக்கணக்கான தொலைக்காட்சிப் பெட்டிகளை அனைவரும் காணக்கூடிய இடங்களில் பொருத்தி ஆலய வீதியிலே வைத்து உங்கள் விளம்பரங்களை ஒரே நேரத்தில் அனைத்து தொலைக்காட்சிப் பெட்டிகளிலும் காணக்கூடிய வகையில் ஒளிபரப்பு செய்ய உள்ளோம்.

**தவறவிடாதீர்கள்!**
**இது ஓர் அரிய சந்தர்ப்பம் !!**

குறைந்த கட்டணத்தில்
கூடிய பலனைப்பெறுங்கள்

இத்துடன் ஆலய நிகழ்வுகளும் காண்பிக்கப்பட உள்ளது என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

உற்சவகால தொடர்புகட்கு:-

ஆலய மேற்கு வீதி,
பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

விக்ரர்,
இல. 05, தேவா வீதி,
யாழ்ப்பாணம். (சி-10102)

---

**அறிந்ததைச் சொல்லுங்கள்!**
**பதக்கத்தை வெல்லுங்கள்!**

## தமிழீழத் தாயகத்தை தெரிந்து வையுங்கள்.

உங்கள் அறிவு
மேம்படுத்தலுக்கு

''தமிழீழத்தைத்
தெரிந்து
கொள்ளுங்கள்''
வினாவிடைப் போட்டி

ஒரு
பவுண்
தங்கப்
பதக்கம்
பரிசு

**அன்பு மாணவர்களே!**

**உங்கள் அறிவினை வளமாக்கி**
**உங்கள் திறமையை வெளிக்காட்டுங்கள்**

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உட்கட்டுமானப் பகுதியினரால் நல்லூர்க் கண்காட்சியை முன்னிட்டு நடாத்தப்படவிருக்கும் வினாவிடைப் போட்டியில் கலந்து கொண்டு முழுநிறைவான தங்கப்பதக்கத்தையும் பெறுமதி மிக்க பரிசில்களையும் சான்றிதழ்களையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

**விண்ணப்ப முடிவுத் திகதி:- 15-08-1994**

விபரங்கள் கடந்த 07, 08, 09-ம் திகதி
பத்திரிகைகளில்

உட்கட்டுமானப் பகுதி,
தமிழீழ பொருண்மிய
மேம்பாட்டு நிறுவனம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம். (சி-10099)

---

## சேவைக்காலச் செயலமர்வு

யாழ்ப்பாணம், நல்லூர்க் கோட்ட ஆரம்பக் கல்வி ஆண்டு 1 - ஆண்டு 5 கற்பிக்கும் சகல ஆசிரியர்களுக்கும் எதிர்வரும் 15ஆம் திகதி தொடக்கம் 19ஆம் திகதி வரை சேவைக்காலச் செயலமர்வுகள் பின்வரும் நிலையங்களில் நடைபெறும்.

யாழ் கோட்ட ஆசிரியர்களுக்கான செயலமர்வு யாழ் மத்திய கல்லூரியிலும், நல்லூர்க் கோட்ட ஆசிரியர்களுக்கான செயலமர்வு யாழ். இந்து களிர் கல்லூரியிலும் நடைபெறும்.

## உடைந்த நிலையில் தபால்கள்

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த தபால்கள் அனைத்தும் உடைத்து ஒட்டிய நிலையிலேயே விநியோகிக்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டு தபால்கள் மட்டுமல்லாது உள்நாட்டு தபால்களும் இம்முறை உடைத்து பரிசீலிக்கப்பட்டபின் ஒட்டிய நிலையிலும் சில அரைகுறையாக ஒட்டப்பட்ட நிலையிலும் விநியோகிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள தபால்கள் இன்று விநியோகிக்கப்பட உள்ளன. (சி)

---

## நினைவு கூருகின்றோம்...

## 12-08-1994...

1985-ம் ஆண்டு இதேதினத்தில் திருமலையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

★ **ஈசி** (பொன்னுத்துரை நவரட்ணராஜா - மேன்காமம், மூதூர் - திருமலை)

1986-ம் ஆண்டு மட்டு -செங்கலடி, கொம்மாந்துறையில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினர் சுற்றிவளைப்பின்போது ஏற்பட்ட சமரில் விழுப்புண்ணடைந்த நிலையில் சயனைட்உட்கொண்டு வீரச்சாவெய்திய

**சுகு** (சீனித்தம்பி சுகுமார் - கொம்மாந்துறை, செங்கலடி - மட்டு)

**குமார்** (-சாந்தகுமார் -கொம்மாந்துறை, செங்கலடி -மட்டு)

1989-ம் ஆண்டு முல்லைத்தீவு - பழம்பாசிப் பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் தீப்** (விசுவலிங்கம் கேதீஸ்வரன் - திரியாய்-திருமலை)

**கீரன்** (வன்னியசிங்கம் உமாசங்கர் - குமுழமுனை-மணலாறு

முல்லை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளரான

**கப்டன் தினேஷ்** (மரியஞானேந்திரன் தம்பிநாயகம் - தமிழ்ச்செல்வன் - உருத்திரபுரம், கிளிநொச்சி

1990-ம் ஆண்டு அம்பாறை - நிந்தவூர்ப் பகுதியில் ஜிகாத்குழுவினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய,

**பிலிப் / திலிப்** (- - பொத்துவில் - அம்பாறை)

**சந்துரு** (- - நிந்தவூர் - அம்பாறை)

யாழ் - கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**சேவியர்** (யூலியஸ் டயனஸ் யோகரட்ணம் - பனங்சட்டிக்கொட்டு - மன்னார்)

1991-ம் ஆண்டு அம்பாறை - மத்தியமுகாம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் காவலரண்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். விவேக்** (உதயகுமார் - 3-ம் குறிச்சி பெரியகல்லாறு - மட்டு)

தமிழீழ கடற்பரப்பில் சிறிலங்காக் கடற்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**தினேஷ்** (இராசதுரை ரவீந்திரமோகன் - சுற்கோவளம் - பருத்தித்துறை)

1992-ம் ஆண்டு 20. 05. 92 அன்று யாழ்-தெல்லிப்பழையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் விழுப்புண்ணடைந்து சிகிச்சை பெற்று வரும்போது வீரச்சாவெய்திய,

**தங்கம்** (காளிமுத்து ரஞ்சன் - புல்மோட்டை - திருமலை)

கிளி - ஆனையிறவு, நித்தியவெட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். காளிதாஸ் - காரி** (வன்னியசிங்கம் சற்குணராசா - 2-ம் வட்டாரம், குச்சவெளி - திருமலை)

**கப்டன் சுபாஸ்கர்** (சோமசுந்தரம் சக்திவேல்-செம்மலை, அளம்பில் மணலாறு)

**லெப். அறிவுமணி மைக்கல்** (சுப்பிரமணியம் துஷ்யந்தன் - மாதகல் - யாழ்)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் சிறிலங்கா படையினராலும் தேசவிரோதிகளாலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொது மக்கள்.

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்.**

★ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10096)

யாழ்ப்பாணம் நல்லூர்

# மண்டேலா காண்பிக்கும் கம்பிமேல் நடக்கும் வித்தை

பாலகுமாரன்

கடந்த மே மாதம் 10-ம் திகதி நெல்சன் மண்டேலாவின் பதவியேற்பு நிகழ்வானது நவீன உலகின் வரலாற்றின் மிக அரியதொரு மாண்புமிக்க நிகழ்வாக பதிவாகிவிட்டது. ஆடல்கள், பாடல்கள் எல்லாம் இன்று ஓய்ந்த பின் மகிழ்ச்சிக்களிப்பும் வற்றிய பின்342 வருட அடிமை வாழ்வின்பின்புதிய தென்னாபிரிக்காமுன்புஅறியாத சிக்கலான பாதையொன்றிலே இன்று அடியெடுத்து வைக்கின்றது. தென்னாபிரிக்காவின் இப்புதிய பயணம் எவ்வாறு அமையப் போகின்றது என்பதை முழு உலகுமே மிக்க ஆர்வத்துடன் கூர்ந்து கவனிக்கின்றது. அச்சமும் ஐயமும் மகிழ்வும் கலந்த ஒரு கலவைப் பார்வையின் ஊடே தென்னாபிரிக்க நகர்வு உற்று நோக்கப்படுகின்றது. ஏனென்றால் ஆனந்தக் கண்ணீர் துளிர்க்க பதவியேற்ற போது மண்டேலா ''இன்று இறுதியாக ஒருவாறாக நாம் அரசியல் விடிவைப் பெற்றுவிட்டோம்; அதேவேளை எமது மக்களை இல்லாமை, வறுமையின் கோரப்பிடியிலிருந்தும் துயரத்தின் தளைகளிலிருந்தும் எல்லாவிதமான ஒடுக்குமுறைகளிலிருந்தும் விடுவிப்பதற்காக இன்று நாம் சபதமெடுக்கின்றோம்; தமது மனிதத்தின் மேன்மையை உணர்ந்து கறுப்பரும் வெள்ளையரும் எவ்வித மனப்பயமும் இன்றி ஒன்றாக வாழ வழிவகுப்போம் என எம்மை நாமே உடன்பாடொன்றிற்குள் இன்று உட்படுத்திக் கொள்கின்றோம்; ஒரு வானவில் நாடாக இன்று தோற்றம் பெறும் எமது நாடு தன்னளவில் என்றும் அமைதியை பேணி உலகோரும் அமைதியை பேணும் என உறுதி கூறுகின்றோம்; ஒருபோதும் எமது நாடு ஒருவரை இன்னொருவர் ஒடுக்கும் முன்னைய இழிநிலைக்கு என்றும் எப்போதும் திரும்பாது......'' என்று சூளுரைத்தார். அன்று கூறிய இந்தக் கூற்று இன்று எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதே உலகின் இன்றைய ஆய்வாகிவிட்டது.

## பழிவாங்கும் பாங்கில்லாத புதியஆட்சி அமைப்பு,

மண்டேலா பதவியேற்ற பின் தேசிய இணக்கத்திற்கான புதிய அரசை அமைத்த விதமே அலாதியானது வெற்றியின் களிப்பை-பழிவாங்கும் பாங்கே இல்லாத-ஒரு சமநிலைக்கு இட்டுச் செல்ல அவர் எவ்வளவு அடக்கி வாசிக்கின்றார் என்பது கவனிக்கத் தக்கது. ஏனென்றால் அறுதிப் பெரும்பான்மைக்கு சற்றுக் குறைவாக 62.65 விழுக்காடு வாக்குகள் பெற்று 400 பேர் கொண்ட தேசியப் பேரவையில் 252 இடங்களைஅவர் பெற்ற போதும் பெரும்பான்மைப் பலத்தை தொடக்கத்தில் அவர் பயன்படுத்த முயலவில்லை. அதுபோலவே ஏனைய தேர்தல் முடிவுகளும் எண்கணித அடிப்படையில் கூட ஒருவித சமநிலையை பேணும் வகையிலே அமைந்திருப்பதைக் காணலாம். ஏனென்றால் எதிர்பார்த்ததை விட சற்றுக் கூடுதலாக வாக்குகளைப் பெற்று அதாவது 20.4 விழுக்காடு பெற்று 82 இடங்களை டி கிளர்க்கின் தலைமையிலான வெள்ளையரின் கட்சியான N. P. எனப்படும் தேசியக் கட்சி பெற்றது. அதுபோலவே இறுதி நேரத்தில் தேர்தலில் பங்குபற்றிய சூலு இன மக்களின் தலைவராக கருதப்படும் புத்தலேசியின் இன்காதா சுதந்திரக் கட்சி 10.5 விழுக்காடு பெற்று 43 ஆசனங்களைப் பெற்றது. அதேவேளை வெள்ளையர்க்குத் தனியான தாயகம் என்கிற தீவிரவாதகோரிக்கையை முன் வைத்த தீவிரவாத வெள்ளையர் கட்சியான விடுதலை முன்னணி (Freedom Front) 9 இடங்களை மட்டுமே பெற்றது. இவ்வாறாக கறுப்பின மக்கள் தரப்பில்-வெள்ளையர் செய்த கொடுமைகட்கு பதிலடி கொடுக்க வேண்டும் என்கிற கோரிக்கையோடு போட்டியிட்ட தீவிரவாத இடது சாரிப் போக்குள்ள P.A.C எனப்படும் பரந்த ஆபிரிக்க காங்கிரஸ்(Pan-African Congress) 5 இடங்களை மட்டுமே பெற்றதும் இங்கு குறிப்பிட வேண்டிய தகவல்கள். 9 மாநிலங்கட்கான தேர்தல் முடிவுகள் இன்னொரு வகைச் சமநிலையை பேணின. தமது தாயகப் பகுதியான குவாசுலு அடங்கிய நேட்டால் மாநிலத்தில் இன்காதாகட்சி வெற்றிகண்டது. 58 விழுக்காடு பல்வேறு ஆசிய நாடுகளிலிருந்து வந்து குடியேறிய நிறத்தாரும் (Coloureds) வெள்ளையரும் அதிகம் வாழும் மேற்கு கேப் (Western Cape) மாநிலத்தில் கிளர்க்கின் கட்சி வெற்றி பெற்று வெள்ளையர் கையிலும் ஒரு மாநிலம் வந்து விட்டது. இம்மாநில தேர்தல் முடிவு ANCக்கு ஒரு பின்னடைவாகக் கருதப்படுவது வேறு விடயம்.

இத்தகையதொரு கலவையான பின்னணியில் தனது 18 பேர் கொண்ட அமைச்சரவையை மண்டேலா அமைத்த விதமும் கவனிக்கத்தக்கது. 6 அமைச்சர் பதவிகள் கிளர்க்கின் கட்சிக்கு கொடுக்கப்பட்டன. இவற்றுள் நிதியமைச்சும் அடங்கும். முன்னைய கிளர்க்கின் ஆட்சியில் நிதியமைச்சராக இருந்தவரே தொடர்ந்தும் நிதியமைச்சராக்கப்பட்டார். இவர் பெரும் வர்த்தகப் பின்னணி கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது, (இவர் இப்போது ஓய்வு பெற்றுவிட்டார்) இருந்த போதும் கிளர்க்கின் விருப்பம் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சுக்களைப் பெறுவதாகவே இருந்த போதும் மண்டேலா இப்பிரதான அமைச்சுக்களை தனது கட்சிக்கேவழங்கினார். அதிலும் குறிப்பாக பாதுகாப்பு,அமைச்சு ஆபிரிக்க தேசியக் காங்கிரசின் இராணுவப் பிரிவான தேசத்தின் ஈட்டி (Umkhow to we Sizwe) யின் தனபதியான யோமொடிஸ் (JoeModise) என்பவருக்கே வழங்கப்பட்டது. இப்போது தேசத்தின் ஈட்டியின் முன்னைய போராளிகள் தென்னாபிரிக்காவின் மறு சீரமைக்கப்பட்ட இராணுவத்தில் சேர்க்கப்படுகின்றார்கள். இவ் இராணுவத்தின் புதிய பெயர் தென்னாபிரிக்க தேசிய பாதுகாப்புப்படை என மாற்றப்பட்டுவிட்டது. அத்தோடு ஏனைய முக்கிய 10 கறுப்பின தளபதிகள் இப்புதிய இராணுவத்தின் ஜெனரல்களாகவும் நியமிக்கப்படுகிறனர்: ஆனால் அதேவேளை வெள்ளையர் அச்சம் கொள்ளக்கூடாது என்பதற்காக அவர்கட்கு பாதுகாப்புணர்வினை தரும் பொருட்டு தொடர்ந்தும் தென்னாபிரிக்க இராணுவத்தின் ஆணையிடும் தளபதியாக அதற்கு பொறுப்பாக இருந்த ஜெனரல் கியர்க் மெய்ரிங்கே (General Georg [Meiring) இருக்கப் போகின்றார். இங்கேயும் ஒரு சமநிலை.

இவ்வாறாக பொதுவாக எல்லாவிடயத்திலும் தன்னையொரு மிதவாதப் போக்குள்ளவராகவே காட்ட முயலும் மண்டேலா அதிகாரமுள்ள உபசனாதிபதிப் பதவிகள் நியமனத்திலும் அவ்வாறே நடந்துள்ளார். எல்லார் எதிர்பார்ப்பிற்கும் மாறாக முதலாவது உபசனாதிபதியாக அவர் கட்சிச் செயலாளரும் தனக்கு இரண்டாவது இடத்தில் இருந்தவருமான சிறில் றம்போசாவை நியமிக்கவில்லை அதற்குப்பதிலாக கட்சியின் வெளிவிவகார பிரசாரப் பொறுப்பாளராக இருந்த தாபோ எம்பெக்கியை [Thabo Mbrki] மண்டேலா நியமித்தார். ஏனென்றால் றம்போசா தீவிரத் தன்மையும் கடும்போக்கும் கொண்டவராகக் கருதப்படுகின்றார். தீவிரத்தன்மையுடைய அடிமட்ட ஆதரவாளர்களைக் கொண்ட இவர் தீவிர தொழிற்சங்கவாதியுமாவார். ஆனால் அதேவேளை 1990 ஆண்டளவில் பொதுவுடமைக்கட்சியோடு தனது தொடர்புகளை துண்டித்த எம்பெக்கியோ மண்டேலாவிற்கும் வெள்ளையின வணிக முதலாளிகட்கும் நல்லுறவு ஏற்படக் காரணமானவராக இருந்தவர். அத்தோடு மேற்குலகம் ஏற்கும் தன்மையுடைய கறுப்பின தேசியவாதக் குறியீடாகவும் அவர் கருதப்படுகின்றார். இவ்வாறாக பல விட்டுக்கொடுப்புக்ளை செய்த மண்டேலா தனது அமைச்சரவையில் பொதுவுடமைக் கட்சியைச்சேர்ந்த மூவரை அமைச்சராக்கியிருப்பது இங்கே சொல்ல வேண்டிய தகவல்தான்.

## கம்பிமேல் நடக்கும் கழைக் கூத்தாடி

இவ்வாறாக கம்பிமேல் நடக்கும் கழைக் கூத்தாடி போல் செயற்படும் மண்டேலா எதிர் நோக்கும் பாரிய சிக்கல், கறுப்பரின் பொருண்மிய நிலை பற்றியதாகின்றது. இவ்விடயத்தில் அவரது சமநிலைப் பேணுகை என்பது அவ்வளவிற்கு பொருத்தமாக இருக்கப்போகின்றது என்பது இப்போதே பெருத்த கேள்விக்குறியாகி விட்டது

ஏனென்றால் கறுப்பின மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் பொருட்டு சர்வதேச பொருண்மிய வல்லுநர் குழுவொன்றால் தயாரிக்கப்பட்ட ஒரு முக்கிய அறிக்கையை பதவியேற்றபின் மண்டேலா புறம்தள்ளி விட்டார். ஏனென்றால் இவ்வறிக்கை கறுப்பரின் வாழ்வு உயர வேண்டுமானால் வருமான மறுபங்கீடு செய்யப்படுவதற்கு தற்போதைய நவீன கட்டற்ற பொருண்மிய முறையை கைவிட்டு அரசுக்கு மேம்பாட்டுப் பணிகளில் மிகக்கூடிய பங்கு அளிக்கின்றது இப்போது மண்டேலா தனது முன்னைய பொதுவுடமைசார் கருத்துக்களை கைவிட்டு விட்டார்; வருமான மறு பங்கீட்டிற்கு வெள்ளையர் திரட்டிய மேலதிக உடமைகளை மீளப்பெற்றும் சிலவற்றை தேசிய மயமாக்கும் நிலைப்பாடுகளையும் பின்பற்ற விரும்புகிறாரில்லை. அவ்வாறாயின் கறுப்பின மக்களின் வாழ்நிலை எவ்வாறு உயர்த்தப்படப் போகிறது என்பதே இன்றைய கேள்வி. இதுவரை எதுவுமே சொந்தமில்லாத நிலையில் கறுப்பரும் எல்லாமே சொந்தமாக இருத்தல் வெள்ளையர்க்கும் உள்ள இடைவெளி எவ்வாறு இட்டு நிரப்பப்போகின்றது என்பதே கறுப்பின மக்களின் இன்றையசிந்தனையாகின்றது

ஏனென்றால் தென்னாபிரிக்காவின் சகல வணிக கைத்தொழில் அமைப்புக்கள் யாவும் வெள்ளையர் கையில்; 80 விழுக்காடு வேளாண்மை உற்பத்தி இவர்கள் கையில்; 85 விழுக்காடு கறுப்பின மக்கள் 13 விழுக்காடு நிலங்களிலே வாழ்கின்றார்கள். 1960 - 80 இடையில் 35 இலட்சத்துக்கும் மேற்பட்ட கறுப்பின மக்கள் தத்தமது சொந்த நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள் இவர்கள் இன்று தமது நிலங்களை மீளத்தருமாறுகோருகின்றார்கள் 180 இலட்சம் மக்கட்கு வீடுவாசலில்லை. ஏறத்தாழ 2 கோடி கறுப்பர்கள் நந்நீரை குடிநீராக பெற வழியில்லை. 50% விழுக்காடு மக்கட்கு எழுத வாசிக்கத் தெரியாது. 1:3:8 என்ற விகிதத்திலே கறுப்பர், நிறத்தவர்,வெள்ளையர் வருமான வேறுபாடு இருக்கின்றது. சராசரி கறுப்பனின் வருமானத்தை விட 13 மடங்கு வெள்ளையர் சராசரி வருவாய் அதிகம். அரசாங்கத் துறையாயினும்சரி, தனியார் தொழிற்றுறையாயினும் சரி கறுப்பர் 1 விழுக்காட்டிற்கும் குறைவாகவே இடை உயர்நிலைப் பதவிகளை வகிக்கின்றனர். அதே வேளை மண்டேலா ஏற்கனவே பதவியில்இருக்கும் 1.5 மில்லியன் அரச பாதுகாப்பு துறை சேவையாளரின் தொழிலுக்கு உத்தரவாதம் வழங்கியிருக்கின்றார்.

## எதிர்நோக்கப்படும் அபாயம்

பொதுவாகவே மிகச்சிக்கலாக உருவெடுக்கப் போவது நிலப் பிரச்சினையாகவே இருக்கப் போகிறது. கறுப்பரின் ஏழ்மை என்பது அவர்களிடமிருந்து அவர்களின் சொந்த நிலங்கள் பறிக்கப்பட்டமையையே குறிக்கும். எனவே மண்டேலா வெள்ளையரிடமிருந்து தமது நிலங்களை ஏதோ ஒரு வகையில் பெற்றுத் தருவார் என காத்திருக்க விரும்பாத பல கறுப்பின மக்கள் வெள்ளையர் நிலங்களில் சென்று குடியேறத் தொடங்குவதாக தெரிகின்றது. அண்மையில் அமைச்சரவையில் கூட இடம் வழங்கப்படாத A.N.C கட்சி செயலர் சிறில் றம்போசா நிலமின்மைசிக்கல் தீர்க்காவிட்டால் தென்னாபிரிக்கா பல துண்டுகளாக சிதறிவிடும் என்கிறார். இந்நிலையிலே அண்மையில் வெளியான நில மோசடி பற்றிய செய்தியொன்று கறுப்பர்களை குமுற வைக்கின்றது. தேர்தல் நடப்பதற்கு இரு தினங்கட்கு முன் கிளர்க் குவாசுலுப் பகுதியில் 1.2 மில்லியன் கெக்டேயர் பரப்புள்ள நிலங்களை குலு மன்ஸ் குட்வில் சுவெயத்தினி தலைமையிலான ஒரு நம்பிக்கை பொறுப்பாளர் சபைக்கு கைமாற்றி விட்ட செய்தி தான் அது. ஏறத்தாழ அப்பகுதி அரச காணிகளில் மூன்றிலொரு பகுதி இது. இந் நிலக் கைமாற்றம் புத்தலேசியை தேர்தலில் பங்குபற்ற வைக்க வழங்கப்பட்ட கையூட்டு எனச் சிலர் இப்போது கருதுகின்றனர். இப்போது உலகிலே மிகப்பெரிய நில உடமையாளர் என்கிற கின்னஸ் சாதனையை சுவெயத்தினி படைத்து விட்டார். இது பற்றி தமக்கு எதுவும் தெரியாது என மண்டேலா தரப்பில் கூறப்படுகின்றது.

இவ்வாறாக இருந்த போதும் மண்டேலா கறுப்பின மக்களின் வாழ் நிலையை உயர்த்த மிகப் பாரிய பொருண்மிய திட்டமொன்றை இப்போது முன்வைத்துள்ளார். புனரமைப்பிற்கும் வளர்ச்சிக்குமான திட்டம் (Reconstruction and Development programme - R.D.P) என இது அழைக்கப்படுகிறது. ஏறத்தாழ 39 பிலியன் றான்ட் (Rand) அதாவது 351 பிலியன் செலவிலான இத்திட்டம் பல மிலியன் வேலை வாய்ப்புக்களை 10 வருடத்திற்கான இலவச கல்வி. சுகாதார வசதிகளை மிகப் பாரிய அளவிலான மின்மயமாக்கல். நந்நீர் வழங்கல். வதிவிட வசதிகள் அளிக்கும் இலக்குகள் கொண்டது. 5 வருடத்திற்குள் 10 இலட்சம் வீடுகள் கட்டப்படவேண்டும் என்கிற ஒரு இலக்கே இத் திட்டத்தின் பிரமாண்டமான தன்மையைப் புரிய வைக்கும் இத்தகைய பிரமிப்பு ஊட்டும் திட்டத்திற்கான பணத்தை சேமிப்பு மூலமும் இதுவரை காலமும் அணுவாய்வுத் திட்டத்திற்கும் பல்வேறு நிறவேற்றுமை அமைப்புகட்கும் இரகசியமான பாதுகாப்பு செலவினக் கணக்கிற்கும் ஒதுக்கப்பட்ட பணங்களை திருப்பி விட்டு இப்பாரிய அபிவிருத்திக்கான பணத்தை பெற முடியும் என மண்டேலா தரப்பில் கூறப்படுகின்றது. ஆனால் நடைமுறை என்று வரும் போது இவையெல்லாம் இலகுவானதாக இருக்கப் போவதில்லை. என்றாலும் இத் திட்டத்திற்கு ஒத்திசைவாக சில முக்கிய குறுங்கால வளர்ச்சித்திட்டங்களை வகுத்து அவற்றினை தன் மேற்பார்வையின் கீழ் மண்டேலா நிறைவேற்ற முயல்கின்றார். ஆறு வயதிற் குட்பட்ட பாலர்க்கு கருவுற்ற அன்னையர்க்குஇலவச மருத்துவ வசதிகள்கல்விக்கூடங்களில்ஊட்டச் சத்துணவுக் கூடங்கள் அமைத்தல் என்பன இவற்றுள் உள்ளடங்கும்.

இவ்வாறாக மண்டேலா பாரிய அரசியல் பொருண்மிய கட்டமைப்பு மாற்றங்களை கொண்டு வராமல் திறந்த பொருண்மிய முறையை தொடர்ந்தும் பேணி பாரிய நல்வாழ்வு திட்டங்களை மேற்கொள்ள முயல்வது பல ஆய்வாளர் தரப்பில் மட்டுமல்ல கறுப்பின மக்கள் மனதில் ஐயுறவை, குழப்பத்தை ஏற்படுத்துவதாக கூறப்படுகின்றது. இதுவரை காலமும் ஆயுதம் தாங்கி பாதுகாப்பு குழுக்களின் உறுப்பினராக இருந்த கறுப்பின இளைஞர்கள் வேகமான மாற்றங்கள் காணாது அதே சமயம் தமது ஆயுதங்களை ஒப்படைக்கவும் தயங்குவதும் ''இதுவரை நடந்த மாற்றம் என்ன? மண்டேலா சனாதிபதியானது மட்டும் தான்.மற்றப்படி எல்லா அதிகாரங்களும் பழைய வெள்ளையர் கையிலே'' என்று

(10ஆம் பக்கம் பார்க்க)

# இலக்கிய வாழ்விலிருந்து துறவறம் பூண்டுள்ள படைப்பாளிகள்!

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் தீவிரமடைந்துள்ள இன்றைய நிலையில், ஒரு புறம் பல புதிய படைப்பாளிகள் அறிமுகமாகியுள்ளதோடு தமது படைப்புகளை வெளிக்கொண்டும் வருகின்றனர்.

கவிதை, சிறுகதை என்ற வடிவங்களில் இலக்கியங்கள் படைப்பதில் இவர்கள் புதிய உற்சாகத்துடன் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களுக்கு இங்கிருந்து வெளிவரும் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் உரிய இடத்தை வழங்கியும் வருகின்றன.

கடந்த காலத்தில் இலக்கியப் படைப்பாளிகள் எனப் பெயர் பெற்றவர்களில் ஒரு சிலரைத் தவிர, மற்றையோர் ஆக்க இலக்கிய பணியிலிருந்து ஒதுங்கிக் கொண்டுள்ளனர்.

இந்த ஒதுங்கலுக்கு என்ன காரணம்? இந்த மண்ணுடன் மனசு ஒட்டாமல் போனது ஏன்?

இதேசமயம் என்றுமில்லாதவாறு இந்த மண்ணில் இலக்கிய படைப்புகளின் தேவை உணரப்பட்டிருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும்.

சுமார் 40 வருடங்களாக அகிம்சை வழியிலும், ஆயுத வழியிலும் நாம் இந்த மண்ணிற்கான விடுதலை வேண்டி போராடிக் கொண்டிருக்கின்றோம்.

அந்நிய ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து இழந்த எமது உரிமையை மீட்பதற்காக உயிரிழப்புகளை தாங்கி போராடி வருகின்றோம்.

இந்தவேளையில்- இந்த மண்ணில் புத்திலக்கியங்கள் பெருமளவில் படைக்கப்படுதல் வேண்டும்.

எங்கு போராட்டம் நடைபெறுகிறதோ அங்கெல்லாம் ஜீவ இலக்கியங்கள் முளைவிட்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

ரஷ்ப்ப் புரட்சிக்காலத்தில் அங்கு தோன்றிய இலக்கியங்கள் இன்றளவில் கூட அதன் வீச்சை வெளிப்படுத்திக் கொண்டேயிருக்கின்றன.

அந்த இலக்கியங்களை படைத்த படைப்பாளிகள் இன்று உன்னதமான இடத்தில் வைத்து மதிக்கப்படுகின்றார்கள்.

இந்திய சுதந்திரப் போராட்ட காலத்தில் தமிழ்க் கவிஞன் பாரதி தனது கவிதைகளினால் இந்திய சுதந்திரத்திற்கு கோஷமிட்டான்.

சீனாவின் கலாசார புரட்சிக் காலத்திலும் இஸ்ரவேலின் தாயக மீட்புக் காலத்திலும், பலஸ்தீன விடுதலைப் போராட்ட காலத்திலும் ஏராளமான உன்னத இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளன.

> **தமிழ் நாட்டில் மட்டும் இருந்து வெளிவருவதல்ல; தமிழில் எழுதப்படுவதுதான் தமிழ் இலக்கியம். இது உணரப்படவேண்டும். தமிழில் எமது படைப்பாளிகள் இங்கேயேநிறையப்படைக்கலாம்; படைக்க வேண்டும்.**

அர்ப்பணிப்புகள் நிறைந்த இந்த அற்புதமான விடுதலைப் போராட்டத்தில் இலக்கிய கர்த்தாக்களின் மௌனம் அர்த்தமற்றது என்பதை அவதானிக்க முடிகின்றது.

சிறந்த படைப்பாளிகள் பலரை பிரசவித்த தேசம் இது.

இந்த மண்ணிலிருந்து சென்று கொழும்பிலும், இந்தியாவிலும், மேற்குலகிலும் படைப்பாளிகள் பலர் தங்கியுள்ளனர்.

'புலம்பெயர்ந்தோர் இலக்கியம்' என புதிய நோக்கில் இலக்கியம் தற்போது படைக்கப்படுகின்ற போதிலும் அந்த இலக்கியங்கள் பெரியளவில் தமிழ்ப் பத்திரிகையை ஆக்கிரமித்திருப்பதாகச் சொல்ல முடியாது.

ஒரு குறிப்பிட்டளவு சிறிய தொகையினரே 'புலம்பெயர்ந்தோர் படைப்பாளிகள்' என்ற பட்டியலில் சேருகின்றனர் மிகுதியான சிறந்த நீண்டகாலப்படைப் பாளிகள் எமது மண்ணில் உள்ளனர்.

நிகழ்வுகள் பதிவு செய்யப்பட வேண்டியது தவிர்க்க முடியாது. பதிவு செய்யாவிடில் இந்த மண்ணின் படைப்பாளிகள் வரலாற்றில் மாபெரும் தவறை இழைத்தவர்களாக வேண்டி வரலாம்.

இந்த மண்ணின் இலக்கியங்களை எதிர்பார்த்து உலகம் காத்து நிற்கிறது. எமது சந்ததிக்கு நாம் இலக்கியங்கள் மூலம்தான் மண்ணின் செய்திகளை சொல்ல வேண்டிய தேவையும் உள்ளது.

இந் நிலையில் ஆக்க இலக்கிய துறையில் 'பிரபலங்கள்' என்று சொல்லப்படுவோர் மௌனமாக இருப்பதற்கான காரணம் என்ன?

இந்தக்கேள்விகளுக்குப் பதில்பகர வேண்டியவர்களும் இலக்கியப் படைப்பாளிகளே.

யாழ்ப்பாணத்திற்கு சமீபத்தில் வந்து திரும்பிய சுபமங்களா ஆசிரியரிடம் நமது இலக்கியப் படைப்பாளிகள் தமது படைப்புகளை கொடுத்துவிட முண்டியடித்தமை வேறு விதமாகவும் சிந்திக்க வைத்துள்ளது.

இங்குள்ள பிரபலமான படைப்பாளிகள் இந்திய பத்திரிகைகளின் அங்கீகாரத்தை வேண்டி நிற்பது இதன் மூலம் தெளிவாகியது.

மாதம் ஐயாயிரம் கதைகள் தமிழக சஞ்சிகைகளை வந்து அடைகின்றன. இவற்றில் நூற்றுக் கணக்கான சிறுகதைகளே மாதம் ஒன்றிற்கு பிரசுரிக்கப்படுகின்றன. இவற்றில்தான் இங்குள்ள படைப்பாளிகளின் படைப்புகளும் இடம்பெறுகின்றன.

இந்த மண்ணில்-

களங்கள் போதியளவில் இல்லையே என சில படைப்பாளிகள் ஆதங்கம் கொள்கின்றனர். களங்கள் போதவில்லை என்பது சரியான காரணமாகப் படவில்லை. இங்குள்ள களங்கள் சரியாகப் பயன்படுத்தப்படவில்லை.

ஏனெனில்- இங்கு வெளிவரும் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் தரமான இலக்கியப் படைப்புகளைத் தேடிப் பிரசுரம் செய்வதற்குத் தயாராகத்தான் இருக்கின்றன.

**வவுனியா - திலீபன்**

சரி! அவர்கள் சொல்வது போன்று களங்கள் போதவில்லை என்றால் உருவாக்க வேண்டியது யார்?

இங்குள்ள படைப்பாளிகளில் பலர் தமிழக சஞ்சிகைகளின் அங்கீகாரத்தை வேண்டி நிற்பது ஒரு பக்கம் இருக்க, தமிழக சஞ்சிகைகள் எமது படைப்பாளிகள் பற்றியும் படைப்புகள் பற்றியும் என்ன விதமான கருத்துக்களைக் கொண்டிருக்கின்றன என்பதை நாம் சிந்திக்க வேண்டிய நிலையில் உள்ளோம்.

ஈழத்து இலக்கியம் தமிழக வாசகர்களுக்குப் புரிவதில்லை. அதற்கு அடிக்கோடிட்டு பொருள் விளக்க வேண்டும் என்பதே தமிழக சஞ்சிகைகளின் கருத்து.

யாழ். வந்த கோமல் சுவாமிநாதன் தமிழகத்தில் வட்டார மொழியில். எழுதும்- ராஜநாராயணன், பூமணி, தோப்பில் முகமதுமீரான் ஆகிய எழுத்தாளர்க

(11 ஆம் பக்கம் பார்க்க)

# வாசுதேவ நாணயக்கார கிளப்பியுள்ள சர்ச்சை; பொது ஜன முன்னணியின் கைவிரிப்பு

சிறிலங்காவின் பொதுத் தேர்தல் களம் சூடு பிடிக்க ஆரம்பித்து விட்டிருப்பது தெரிந்ததே. இதில் இரத்தினபுரி மாவட்ட பொதுஜன ஐக்கிய முன்னணியின் முதன்மை வேட்பாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், நவசமசமாஜக் கட்சியின் தலைவருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ள சில கருத்துக்கள் பலத்த வாதப் பிரதிவாதங்களை உருவாக்கி இருப்பதுடன் சர்ச்சைகளையும் கிளப்பியுள்ளது. கடந்த வாரத்தில் ரி. என். எல். தொலைக்காட்சி சேவை வாசுதேவ நாணயக்காராவிற்கும், ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான ஜினதாச நியதபாலவுக்கு இடையிலான விவாதம் ஒன்றை ஒளிபரப்பியது.

இந்த விவாதத்தின் போது வாசுதேவ நாணயக்கார, ''தமிழர்களும் முஸ்லிம்களும் பெரும்பான்மையாக வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களை ஒரே நிர்வாகமாக இணைத்துக் கொள்வதே வடக்கு, கிழக்குப் பிரச்சினை தீர்வதற்கு ஒரே வழியாகும்'' எனத் தெரிவித்து இருந்தார்.

''இவ்வாறு செய்யப்பட்டால் அது நாட்டைப் பிளவுபடுத்துவதற்குவழிவகுக்கும்'' என்று வாதிட்டார் ஜினதாச நியதபால.

''வாக்குச் சீட்டுகளில் புள்ளடி போடுவது மட்டும்தான் ஜனநாயகம் அல்ல. பெரும்பான்மையினருக்குள் அடங்காதவர்களின் நலன்களைப் பாதுகாப்பதும் அதன் கடமையே. மொழி, சமூகம், பிரதேசம் என்பவற்றை கருத்தில் கொள்ள வேண்டும். உலகம் முழுவதிலும் இந்தக் கோட்பாடு ஜனநாயக பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த யோசனை சிங்களவர்களைக் காட்டிக் கொடுப்பதாகாது. பதிலுக்கு புலிகளைத் தோற்கடிப்பதில் தமிழர் தரப்பு ஜனநாயக சக்திகளுக்கு ஊக்கம் கொடுப்பதாகும்'' என்று தனது நிலையை வெளிப்படுத்தினார் வாசுதேவ.

பிரதேச ரீதியாக வகுக்கப்பட்ட எல்லைகளைக் கவனத்திற் கொள்ளாமல் சமூகங்களின் அபிலாசைகளைத்தீர்ப்பதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பதும், ஒரு பிரதேசத்தில் வாழும் இனங்களின் விகிதாசாரத்தைப் பாதிக்கக்கூடிய வகையில் எந்தவகையான குடியேற்றத்திட்டங்களும் அமைக்கப்படக் கூடாது என்பதும் வாசுதேவ கூறிய கருத்துக்களின் சாரமாக இருந்தது. அத்துடன் ''வடக்கு, கிழக்கு வாழ் மக்கள் ஒரே நிர்வாக அலகின் கீழ் தொடர்ந்து வாழ்வதற்கு வழி வகுப்பது பொதுஜன ஐக்கிய முன்னணியின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்று ''இதனை முன்னணியின் சார்பாக வலியுறுத்த விரும்புகிறேன்'' எனவும் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

**இளையவன்**

இதற்குப்பதிலளித்த நியதபாலாவோ, 'பாரம்பரிய தாயகம்'' என்று எப்பகுதியையும் எவருக்கும் விட்டுக் கொடுக்க முடியாது என்றும், பருத்தித்துறை முதல் தேவேந்திர முனை வரை எல்லாரும் எவ்விடத்திலும் வசிப்பதற்கு அருகதை உடையோர் என்றும் குறிப்பிட்டார்.

★ ★ ★

வான் அலைகளில் தவழ்ந்து வந்த இந்த விவாதம்பௌத்த மத பீடங்களில் உடனடியாகவே பலத்த சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. மல்வத்தை பீடத்தைச் சேர்ந்த பீடாதிபதி வண. ரம்புக்வெல விபஸ்ஸி தேரோ, ''வாசுதேவாவின் கருத்துக்கள் 'தமிழர்களின் பாரம்பரிய தாயகம்' என்ற கோரிக்கையை ஏற்றுக் கொள்வது போல இருப்பதாகக்'' கவலையுடன் குறிப்பிட்டார்.

வாசுதேவ நாணயக்கார கிளப்பியுள்ள இவ் அரசியற் புயலுக்கு இன்று அவர் சார்ந்து நிற்கும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் பதில் சொல்ல வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளது'

ஏற்கனவே இனப்பிரச்சினை விவகாரத்தில், தனது நிலைப்பாட்டை வெளியிடுவதில் தத்தளித்துக் கொண்டிருக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணியினருக்கு இது ஒரு புதிய சுமை என்றே கூற வேண்டியுள்ளது. ஆனால், இவ்விவகாரத்தை அவர்களால் புறந்தள்ளி விடவும் முடியாத நிலையும் உள்ளது.

இந் நிலையில் இந்த இரு பீடாதிபதிகளையும் பொதுஜனஐக்கியமுன்னணியின்சார்பில் திருமதி சந்திரிகா குமாரணதுங்கவும், கேணல் அநுருத்த ரத்வத்தையும் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

மல்வத்தை பீட மகாநாயக்கர் வண. விபஸ்ஸி தேரோவிற்கு இது தொடர்பாக திருமதி சந்திரிகா குமாரணதுங்கா பதிலளிக்கையில், அவரது கருத்துக்கள் முன்னணியின் கருத்துக்கள் அல்ல எனத் தெரிவித்தார்.

அத்துடன் வாசுதேவ நாணயக்காரா தனியொருநபராகவே பொதுஜனஐக்கிய முன்னணியுடன் இணைந்து இருப்பதாகவும், அவர் தலைமை வகித்த நவசமசமாஜக் கட்சியுடன் கூட்டணி அமைக்கப்படவில்லை எனவும், சுட்டிக்காட்டியதுடன், அத்துடன் எதிர்காலத்திலும் இது போன்ற கருத்துக்களை அவர் தெரிவிப்பாராயின் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் உறுதியளித்துள்ளார்.

அதாவது பொதுஜன ஐக்கியமுன்னணி வழமை போலவே தனதுபழியை அளித்துள்ளது. பதிலை தனிப்பட்ட ரீதியில் வாசுதேவநாணயக்காராவின் தலையில்பேட்டு விட்டுத் தப்பித்துக் கொள்ள முயன்றுள்ளது. இந் நிலையானது, இனப்பிரச்சினை விவகாரத்தில், பொதுஜனஐக்கிய முன்னணியின் எல்லையைவரையறுத்துக் காட்டுவதற்குஒருநல்ல உதாரணம் என்றே கொள்ளலாம்.

யாழ்ப்பாணம் ... நூலகம்

# தேர்தலின் பின் சமாதானம்; நம்பிக்கையூட்டும் அறிகுறிகள் இல்லை

எதிர் வரும் பொதுத் தேர்தலில் எந்தக் கட்சி வெற்றி வாய்ப்பைப் பெற்றுக் கொண்டாலும் வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கு தீர்வு நோக்கிய திசையில் ஒரு அடிதானும் முன்னேற்றம் ஏற்படாது என்பதை இப்போது சந்தேகத்திற்கு இடமின்றிக் கூறமுடிகின்றது. தேர்தலுக்கான வாக்கு வேட்டைக் களத்தில் பிரசாரப் புயல் வீசிவரும் இன்றைய சூழ்நிலையில் இரு பிரதான கட்சிகளும் இனப் பிரச்சினை தொடர்பாக கூறிவரும் கருத்துக்கள்இதனை ஓரளவுக்கு ஊர்ஜிதம் செய்வதாக உள்ளது எனலாம்.

## ஓரவஞ்சகம் இப்போதே

பிரதான எதிரணிக் கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணி வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் எனக் கூறி வருவது தெரிந்ததே. ஆனாலும், பொருளாதார தடைகளை விலக்கிக் கொள்வது. அவசரகால சட்டத்தை நீக்குவது, வகைதொகையின்றிக் கைது செய்யப்பட்டு சிறைக் கூடங்களிலும், சித்திரவதை முகாம்களிலும் வாடும் தமிழர்களை விடுதலை செய்வது அல்லது விரைவில் நீதி விசாரணைகளுக்கு உட்படுத்துவது போன்ற அத்தியாவசிய விடயங்கள் தொடர்பாக இது வரையில் எந்த இடத்திலும் எந்தவொரு வார்த்தையையும் உதிர்த்ததாகதெரியவில்லை. குறிப்பாக எந்தவித குற்றச் சம்பவங்களுடனும் தொடர்பின்றி, வற்புறுத்தல் காரணமாக ஒப்புதல் வழங்கிய பலர் விடுதலை தொடர்பாகக் கூட பொதுஜன ஐக்கிய முன்னணி அக்கறை காட்டுவதாக தெரியவில்லை.

பொருளாதாரத்தடை என்ற வகையில் அத்தியாவசிய பொருள்கள் பலவற்றிற்கும் விதிக்கப்பட்டுள்ள தடை இப்பகுதி மக்களின் பெரிய அளவு இயல்பான வாழ்க்கையை பாதித்து இருப்பதுகூட பொதுஜன ஐக்கிய முன்னணியின் அக்கறைக்கு உரியதாக இல்லை. யுத்தத்தின் காரணமாக தோன்றியுள்ளவடுக்களானஇழக்கப்பட்ட உயிர்கள் மற்றும் உடைமைகள் தொடர்பாக சாதாரண பொது மக்களுக்கு என்ன செய்யப் போகின்றது என்பதையும் முன்னணி இதுவரை தெளிவாக்கியதாக இல்லை ஆனால் ஏதோ மந்திரத்தில் மாங்காய் விழுத்துவது போன்ற பாணியில் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்று முணு முணுப்பதில் மட்டும் முன்னணி கரிசனை காட்டுகின்றது.

இதே வேளை எம்பிலிப்பிட்டியவில் காணாமல்போன மாணவர்கள் விவகாரம், பல இடங்களிலும் கண்டெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகளின் தொடர்பிலான சர்ச்சைகள், ஜே. வி. பியினர் முன்னின்று நடத்திய கிளர்ச்சியின் போது காணாமல் போனவர்கள் பற்றிய புகார்கள் என்பன தொடர்பாக பூரண விசாரணை மேற்கொள்ளப்பட இருப்பதாகவும். இதன் மூலம் நட்ட ஈடாவது கிடைக்க வகை செய்யப்படும் என்றும் பொதுஜன ஐக்கிய முன்னணி பிரசாரக் களத்தில் வாக்குறுதி வழங்கி வருகின்றது குறிப்பிடத்தக்கது.

எனவே இந்த இரு விடயங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது தமிழ் மக்கள் தொடர்பாக முன்னணியின் ஆர்வம் தெளிவாகும். எனவே தான் பொது ஜன ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்ததும் ஆரம்பிக்கப்படும் எனக் கூறப்படும் பேச்சுவார்த்தை தொடர்பாக சந்தேகம் கொள்ள வேண்டியதாகிறது. போரில் சிங்கள இளைஞர்களான சிறிலங்கா இராணுவத்தினர் பலியாவதை தடுப்பதையும், இராணுவம் மேலும் பலப்படுத்திக் கொள்வதையும், இராணுவத்தினரை தனக்கு நம்பிக்கை கொள்ளக் கூடிய வகையில் கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டு பேச்சுவார்த்தை என்னும் பெயரில் கால அவகாசம் பெறப்படுவதற்கே பொது ஜன ஐக்கிய முன்னணி முயலக் கூடும் என்பது எதிர்பார்க்கக் கூடியதே:

## ஐ. தே. க. வின் நிலை

முன்னணியின் நிலை இவ் வாறிருக்க ஐ. தே க. ஆட்சி அமைத்தாலும் நிலைமைகளில் முன்னேற்றம் எதுவும் ஏற்படும் என எதிர்பார்ப்பதற்கு இல்லை. அண்மையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற உயர்மட்ட மாநாடும் அதில் எடுக்கப்பட்ட முடிவுகளும் இதனைக் கோடிகாட்டுவதாகும்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பகுதிகளில் ஒவ்வொரு வீட்டிலும் வசிப்பவர்கள் தொடர்பாக கணக்கெடுப்பு ஒன்றை நடத்தி அவர்களுக்கு ஏற்ற அளவில் மட்டும் உணவுப் பொருள்கள் வழங்குவது என்பன போன்ற யுத்த முன்னோடி நிகழ்வுகள் இம் மாநாட்டில் ஆராயப்பட்டுள்ளது.

மேலும் யாழ்ப்பாண குடாநாட்டிற்கு நடாத்தப்படும் கப்பல் சேவையை வரையறை செய்வது பற்றியும், பொருள்களை அனுப்புவதை மட்டுப்படுத்துவது பற்றியும், மக்கள் தொகைக்கு ஏற்ப உணவுப் பொருள்களை மந்த கதியில் அனுப்புவது பற்றியும் படை அதிகாரிகளின் ஊடாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிய வருகிறது.

## பௌத்தபீடங்களின் முன்மௌனம்

இவை இவ்வாறிருக்க, வடக்கு - கிழக்கு பிரச்சினை ஒரு அரசியல் பிரச்சினை என்றும், இதற்கு அரசியல் தீர்வு காணப்படும் என்றும் பொது ஜன ஐக்கிய முன்னணி தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியிருப்பது தொடர்பாக மல்வத்த பௌத்த பீடம் விளக்கம் கேட்டு கடிதம் எழுதியுள்ளது. இக்கடிதம் கிடைத்ததை மட்டும் ஊர்ஜிதப்படுத்தியுள்ள முன்னணி அதற்கு பதில் எதையும் வழங்கவில்லை. இது தொடர்பாக முன்னணி காட்டும் மௌனம் அர்த்தமுடையது என்றே கூறப்படுகிறது. ஒரே நேரத்தில் பௌத்த சிங்கள பேரினவாதத்தையும் தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளையும் சமாளிப்பதில் இருக்கும் சிக்கலே முன்னணியின் மௌனத்திற்கு அடிப்படை எனலாம். இந்தச் சிக்கலில் இருந்து விடுவிப்பதில் ஆக்கபூர்வமாக எதையும் செய்யாமல் இருக்கும் முன்னணி இனப்பிரச்சினைக்கு எப்படி அரசியல் தீர்வு காணக் கூடும்? இந்தப் புதிருக்கு எதிர்காலம் தான் விடையாகும்.

வடக்கு-கிழக்கு ஒரு நாளும் இணைக்கப்பட மாட்டாது என சுதந்திரக்கட்சியின் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்துள்ள போதும் இதன் உப தலைவர்களின் ஒருவரானஜே. எல். பீரிஸ், இரண்டு பகுதிகளும் இருமாகாணமாக இருந்தால் தானே இரண்டு மாகாணங்களை இணைக்க வேண்டும். அதனை விட்டுவிட்டு 'நொதேன்ஏரியா' வடபகுதிஎன்று இப்பகுதியை அமைத்தால் பிரச்சினை தீர்ந்து விடும் எனத் தெரிவித்துள்ளார். கிழக்கு-வடக்கு மாகாணங்களின் எல்லையிலுள்ள சிங்களக்கிராமங்கள் அவ் வக்கிராமங்களுக்கு அண்மையிலுள்ள சிங்கள மாகாணங்களுடன் இணைக்கப்படும் என தெரிவித்துள்ளார். இதே வேளை எந்த ஆண்டை அடிப்படையாகக் கொண்டு இதனை நிர்ணயம் செய்ய போகிறார் என்பதை தெளிவாகக் கூற மறந்து விட்டார்.

வடக்கு-கிழக்குபகுதியில்தமிழர்களுக்கெனஇனப் பிரச்சினை என்பதே இல்லை என்றும், அங்கு இருப்பதெல்லாம் ''பயங்கரவாதம்'' பிரச்சினையே அதற்கு யுத்தம் நடத்துவதே தீர்வு என்றும் அவர்களுக்கு வழங்க வேண்டிய அனைத்தும் வழங்கப்பட்டு விட்டதாக ஐக்கிய தேசியக் கட்சித் தேர்தல் விஞ்ஞாபனத்தில்பிரகடனம்செய்துள்ளதுடன்அத்துடன் தமிழர்களுக்கு தன்னாட்சிப் பகிர்வு அல்லது வடக்கு-கிழக்கு மாகாணங்களின் நிரந்தர இணைப்பு ஐ.தே.க ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது என்றும் தற்போது வழங்கப்பட்டுள்ள சுதந்திர அதிகாரங்களைவிட எதுவும் மாகாணசபைகளிற்கு வழங்கப்பட மாட்டாது என்றும் இந்த அடிப்படையிலேயே எதிர்காலத்தில் பேச்சு வார்த்தை நடத்தப்படும் என்றும் அக்கட்சி கூறுகின்றது. எனவே தான் ஆட்சியை அமைக்கும் என எதிர்பார்க்கப்படும் இந்த இரு கட்சிகளில் எவர் பதவிக்கு வந்தாலும் பிரச்சினைக்கான தீர்வு என்பது கானல் நீரே.

நிமலராஜன்

இது ஒரு புறமிருக்க, மல்வத்தை பீடத்தைச் சேர்ந்த மகாநாயக்கர் தமிழர் பிரச்சினை தொடர்பாக ஐ.தே.க விற்கு தாம் எழுதிய கடிதத்திற்கு ஐ தே.க அளித்த பதில் பூரண திருப்தி தருவதாகக் கூறியுள்ளார். ஆனால் அஸ்கிரிய பீட மகா நாயக்கரோ வடக்கு-கிழக்கு மாகாணங்களை தற்காலிகம் என்ற போர்வையில் ஐ தே.க ஏறத்தாழ நிரந்தரமாகவே இணைந்து விட்டுள்ளதாகவும் இது பற்றிய சர்வசன வாக்கெடுப்பு பல தடவை ஒத்திப் போடப்பட்டுவிட்டது எனவும் ஒரு சாதாரண வர்த்தமானி அறிவித்தல் மூலம் செய்யப்படக் கூடியதை ஐ. தே. க. இன்னமும் செய்யவில்லை எனவும் கண்டனம் தெரிவித்துள்ளார். அத்துடன் ஐ. தே. க. சிங்கள இனத்துக்கு மாபெரும் துரோகம் இழைத்து விட்டதாகவும் அவர் குற்றம் சாட்டி இருக்கின்றார். அத்துடன் சந்திரிகா - அஷ்ரப் ஒப்பந்தம் குறித்து அஷ்ரப் தன்னுடன் பேசியதாகவும் இதனை நன்கு ஆராய்ந்ததில் சிங்கள இனத்திற்கு எதிரான எதுவும் இவ் ஒப்பந்தத்தில் இல்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

> ஒரே நேரத்தில் பௌத்த சிங்கள பேரினவாதத்தையும், தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளையும் சமாளிக்க .வேண்டும் என்பதில் பொதுஜன ஐக்கிய முன்னணி சிக்கல்படுகின்றது. ஆனால் இந்தச் சிக்கலில் எந்தப் பக்கமும் சாயாமல் இருப்பதன் மூலம் அரசியல் லாபம் தேடுவதில் அது ஆர்வம் காட்டுகின்றது.

இதேசமயம் சந்திரிகா - அஷ்ரப் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் அசல் பிரதிகள் அஸ்கிரிய பீடாதிபதிக்கு காண்பிக்கப்படவில்லை என்றும் அதில் போலியான பிரதியே அவருக்கு வழங்கப்பட்டதாகவும் அஸ்ரப் அஸ்கிரிய பீடாதிபதியைத் திட்டமிட்டு ஏமாற்றி விட்டதாக ஐக்கிய தேசியக் கட்சி பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார். இது எப்படியாக இருந்தபோதும் தமிழ்மக்களின் பிரச்சினைக்கு ஏற்பட்ட ஒப்பந்தங்கள் ஆன பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம் ஆகியவை குப்பைக் கூடைக்குள் வீசி எறியப்பட்டதில் பௌத்த பீடங்களின் பங்கைக் கவனத்தில் கொண்டு பார்க்கும்போது மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடங்களின் கருத்து அக்கறைக்கு உரியதாகும். பௌத்த பீடங்களின் இத்தகைய நிலைப்பாடு எதிர்காலத்திலும் தொடர்ந்து நீடித்துக் கொண்டே செல்லும் என்பது எதிர்பார்க்கப்படக் கூடியதே. ஆகவே இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் பௌத்த பீடங்களின் செல்வாக்கிற்கு கட்டுப்படாமல் செயலாற்றும் துணிச்சல் எந்த ஒரு கட்சிக்கும்இல்லை என்பது உணரக் கூடியதே.

## இராணுவத்தின் நிலைப்பாடு

மேலும் வடக்கு - கிழக்கு யுத்தம் தொடர்பாக இராணுவ அதிகாரிகள் மத்தியில் கருத்து வேற்றுமைகள் எதுவும் எழத் தேவையில்லை எனவும், எவர் ஆட்சியை அமைத்தாலும் பாதுகாப்பு அமைச்சர் பதவியில் தானே தொடர்ந்து நீடிக்கப் போவதாகவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ஹமில்டன் வணசிங்க தொடருவார் எனவும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா கூறியுள்ளார். அத்துடன் இராணுவ நடவடிக்கைகளில் பாரிய மாற்றங்கள் எதுவும்ஏற்படப்போவதில்லைஎனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காமினி திசாநாயக்காவிற்கு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பதவி வழங்கப்படாமை கூட அரசியல் நோக்கம் கொண்டது என்றே கூறப்படுகின்றது. பாராளுமன்ற தேர்தல் முடிவுகளின் பின்னர் வரும் புதிய அமைச்சரவையில். பாதுகாப்பு அமைச்சு முழுமையாக ஜனாதிபதியின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்க வேண்டும் என்பதற்காகவே காமினி திசாநாயக்காவிற்கு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பதவி வழங்கப்படுவதை பாதுகாப்பு அமைச்சு செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்கா எதிர்த்துள்ளார் என்பது இப்போது தெரிய வருகிறது. இதனால் தேர்தல் முடிவுகள் ஐ. தே. க விற்கு சாதகமாக அமைந்தால் காமினி பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் நியமனம் பெறக்கூடும் என எதிர்பார்க்கலாம்.

அத்துடன் வடக்கு-கிழக்கு பகுதிகளில் யுத்தம் நடத்துவது இன்று மிகவும் முக்கிய தேவைகளில் ஒன்று எனவும், இதனைச் சில தீய சக்திகள் திட்டமிட்டு குழப்பி வருகின்றன எனவும், இதற்கு இடம் கொடுக்காமல் யுத்தத்தை வெற்றியின் இலக்கு நோக்கி கொண்டு செல்ல வேண்டும் எனவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்கா கருத்துக் கொண்டிருக்கிறார். கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் கடந்த மாதம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர் இதனைப் பகிரங்கமாகவே அங்கு தெரிவித்துள்ளார்.

யுத்தத்தில் இருந்து மக்களின் கவனத்தை திசை திருப்பும் வகையிலும் தேர்தல் பிரசாரம் மேற்கொள்ளப்படுவதும், யுத்தத்தின் முக்கியத்துவத்தை குறைத்து ஆயுத கொள்வனவு, ஊழல், கமிசன்பணம், மற்றும் தலையீடுகள் குறித்து குற்றம் சாட்டப்பட்டு வருவதும், கவலையளிக்கும் விடயங்கள் என்றும் ஹமில்டன் தெரிவித்துள்ளார். யார் ஆட்சியை அமைத்தாலும் வடக்கு-கிழக்கின் இன்றைய இராணுவ தேவை தொடர்ந்து இருக்கும் என்றும் எனவே இராணுவத்தின் நிலையே அன்றி இராணுவ நடவடிக்கைகளை தேர்தலுக்காக கொச்சைப் படுத்தக்கூடாது என தெரிவித்தார்.

மேலும் இத்தகைய கூற்றுக்கள் உண்மையற்றவை எனவும் எது நடந்தாலும் யுத்தத்திலிருந்து நாம் பின்வாங்க முடியாது எனவும் எனவே யுத்தத்திலிருந்து மக்களின் கவனத்தை அரசியல் இலாபத்திற்காக திசைதிருப்பக் கூடாது எனவும் ஹமில்டன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இவை ஒரு புறமிருக்க தேர்தல் பிரசாரம் நடத்தப்படும் அதே வேளை பெருமளவிலான படையினர்வடக்கு, கிழக்குபகுதிகளில்குவிக்கப்பட்டு வருவதாகவும் இதற்கு முன்னர் ஒருபோதும் படையினர் இவ்வளவு தொகையில் குவிக்கப்பட்டது இல்லை எனவும் இராணுவ நடவடிக்கை ஒன்று வடக்கில் பெரிய அளவில் மேற்கொள்ளப்படலாம் எனவும் இதற்கான பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உட்பட பல வடபகுதி உயர் அதிகாரிகள் சென்ற வாரம் மகாநாடொன்றை நடத்தியுள்ள

(8 ஆம் பக்கம் பார்க்க)

# இட ஒதுக்கீட்டை பகடைக் காயாக்கும் தமிழக அரசியல் வாதிகள்

அரசியல் போராட்டங்களுக்கும் கடையடைப்புக்களுக்கும் என்றுமே பற்றாக்குறை இல்லாமல் செய்வது தமிழ் நாட்டின் அரசியல் பண்பு. எப்படியும் வாரமொரு முறையாவது, ஏதோ ஒரு பிரச்சினை எந்தவொரு கட்சியாலும் முன்வைக்கப்பட்டு அரசியலில் சூடு பிறப்பது வழமையான தொன்றாகிவிட்ட நிலையில்' பிற்படுத்தப்பட்ட, நலிந்த பிரிவினருக்கான கல்வி, வேலை வாய்ப்புகளில் இட ஒதுக்கீடு சம்பந்தமான பிரச்சினை அரசியற் காரணங்களின் பின்னணியில் உச்சத்துக்கு சென்று கொடிகட்டி நிற்கின்றது.

பிரச்சினையின் முக்கியத்துவத்தையும் அதற்கானதீர்வை நாடுவதில், அரசியல் கட்சிகளின் தடாலடிகள். போராட்டங்கள், திடீர் ஒற்றுமைகள், உண்ணாவிரதங்கள், பேரணிகள் எந்தளவுக்கு உதவின என்பதை விட, இதனால் அக்கட்சிகள் பெற்ற நலனே ஒட்டு மொத்தக் கணக்கில் இலாபத்தைக் காட்டி நிற்கின்றது.

ஆரம்பத்திலிருந்தே கல்வி, வேலை வாய்ப்புகளில் முற்பட்ட சாதியினர் முதலிடத்தைப் பெற்றுவந்த நிலையில், பிற்பட்ட, ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் நலன்களைப் பாதுகாக்கும் வகையில், இட ஒதுக்கீடு மிக்க அவசியமானதொன்றாகக்கருதப்பட்டது. இந்தியாவில் பொதுவான பிரச்சினையாக இது காணப்பட்டாலும், 1920 ஆண்டில் முதற் தடவையாக, இந்தியாவிலேயே முதன்முறையாக முற்பட்டோர் உட்பட பல்வேறு சமூகத்தினருக்கும் சாதி ரீதியான விகிதாசார இட ஒதுக்கீடு, அன்றைய சென்னை மாகாண அரசினால் அறிமுகம் செய்யப்பட்டது.

அன்றிலிருந்து தமிழக அரசியலில், இட ஒதுக்கீடு தொடர்பான சர்ச்சைகள் தோன்றின, காலத்துக்குக் காலம் ஆட்சியாளர்களை மாற்றுவதில் கூட இடஒதுக்கீடு முன்னிலையில் வந்தது. இந் நிலையில் 1951-ம் ஆண்டில் செண்பகம் துரைராஜன் என்பவர் சுப்ரீம் கோர்ட்டில் தொடுத்த வழக்கின் பிரகாரம், அரசியல் சமத்துவத்தை இவ்வாறான ஒதுக்கீடு தடை செய்கிறது எனக்கூறி, இடஒதுக்கீட்டை சுப்ரீம் கோர்ட் தள்ளுபடி செய்து தமிழக அரசுக்கு எதிராக தீர்ப்பளித்தது.

அன்று தமிழகத்திலிருந்த அரசியற் தலைவர்களாகிய காமராஜ், அண்ணா, பெரியார் ஆகியோர் கட்சி வேறுபாடின்றி, மீளவும் இட ஒதுக்கீட்டை அமுலாக்குமாறு, அன்றைய பிரதமர் ஜவஹர்லால் நேருவுக்கு மகஜர் செய்தனர்.

மாநில அரசுகளே தங்கள் தேவைக்கேற்றாற் போல் இடஒதுக்கீட்டை மேற்கொள்ளும் வகையில், அரசியல் சட்டதிருத்தம் செய்யப்பட்டது. தமிழ்நாட்டில் 80 சதவீதத்திற்கும் அதிகமான பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் இருந்தும் 49 சதவீதமே இட ஒதுக்கீடு செய்யப்பட்டது. என்னதான் பிற்படுத்தப்பட்டோருக்கு சலுகைகள் வழங்குவதாக கூறிக்கொண்டாலும் முற்பட்ட சாதியினரின் ஆதிக்கம் அரசிலிலிருந்ததை இது காட்டுகிறது.

1963 இல் சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கொன்றின் பிரகாரம் 50 வீதத்திற்கு மேல் இடஒதுக்கீடு செய்யக்கூடாது என தீர்ப்பளிக்கப்பட்டது. தமிழகத்தில் 49 சதவீத ஒதுக்கீடே இருந்தமையால் இத்தீர்ப்பினால் பெரியளவில் குழப்ப நிலை தமிழகத்தில் ஏற்படவில்லை.

1976 இல், சுப்ரீம் கோர்ட் நீதிபதியாகவிருந்த வி.ஆர். கிருஷ்ணய்யர் 50சதவீத ஒதுக்கீடு என்பது கடுமையாகப் பின்பற்றப்படத் தேவையில்லை என்றார். இத்தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டு 1980 இல் தமிழக முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரன் இட ஒதுக்கீட்டை 68 சதவீதமாக உயர்த்தினார். இந்நிலை, 1992 வரை நீடித்தது.

இந்தியப்பிரதமராக 1989ல் பதவிக்கு வந்த வி.பி. சிங் இடஒதுக்கீடு தொடர்பான மண்டல் கமிஷனின் பரிந்துரைகளை செயற்படுத்த துணிந்தாலும், அவரது பதவியிழப்பு, இட ஒதுக்கீட்டிற்கு தடையாகப்போயிற்று.

1992 இல், இந்திரா சஹானி சுப்ரீம் கோர்ட்டில், இந்திய அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த இட ஒதுக்கீட்டுக்கெதிராக தொடர்ந்த வழக்கில், ஒன்பது நீதிபதிகளடங்கிய குழு, 50 வீதத்திற்குமேல் இடஒதுக்கீடுகூடாதுஎன்ற, 1951ம்ஆண்டைய தீர்ப்பையே மீண்டும் வலியுறுத்தியது.

ஆனால், 1951 இல் இருந்த நிலையிலேயே பிற்படுத்தப்பட்டோர், 1992 இலும், வேலை வாய்ப்புக்களிலோ, கல்வி வாய்ப்புக்களிலோ முற்றாக புறக்கணிக்கப்படும் நிலையில் இருக்கிறார்கள் என்பது கேள்விக்குரிய தொன்று. ஆனால் அரசியல் வாதிகள் இவற்றைப்பற்றிச் சிந்திக்க தயாராக இல்லை.

ஏனெனில் கணிசமான அரசியல் சாதகவிளைவை அவர்களுக்குத் தந்திருந்த இடஒதுக்கீட்டை, குறைக்க முயன்று வாக்கு வங்கியை சிதறடித்துக் கொள்ள அவர்கள் தயாராக வில்லை. ஆரம்பகாலத்திலிருந்தேஇட ஒதுக்கீட்டில்மாற்றம் கொண்டுவர முயன்றவர்கள் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். 1989இல், பிராமணர்கள் உட்பட பொருளாதார ரீதியில் பின் தங்கிய வகுப்பினரை இடஒதுக்கீட்டின் கீழ் கொண்டு வருவேன் என ஜெயலலிதா அறிவித்திருந்தார். அன்றைய தேர்தலில் 234 இடங்களில் 27 இடங்களையே பிடிக்க இதுவும் ஓர் காரணமாயிற்று. பதிலாக ஆட்சிக்கு வந்த தி.மு.க, மேலும் ஒரு வீதத்தினால் இடஒதுக்கீட்டை அதிகரித்தது. இதன்படி, பிற்படுத்தப்பட்டோருக்கு 30 வீதமும், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 20 வீதமும் ஆதி திராவிடர்களுக்கு 18 வீதமும், மலைவாழ் மக்களுக்கு ஒரு வீதமும் இடஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்த அனுபவம், ஜெயலலிதாவுக்கு ஓர் பாடமாயிற்று, எனவே, இந்த முறை 50 சதவீதத்திற்கு மேலமையாத இடஒதுக்கீடு என்னும் சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பை தமிழக அரசு கடைப்பிடிக்குமானால், அடுத்த முறை அ தி.மு. க பதவிக்கு வரமுடியாது என்பதை ஜெயலலிதா தீவிரமாகவே உணர்ந்தார். எனவே, இடஒதுக்கீட்டை கடைப்பிடிப்பதற்காக நீதிமன்ற உத்தரவையும் அலட்சியப்படுத்தினார் ஜெயலலிதா. விளைவு, தமிழகத்தை விட அதிக இடஒதுக்கீட்டை அளித்து வரும் கர்நாடகாவுக்கு வராத சிக்கல், விஜயன் என்னும் சென்னையைச்சேர்ந்த சட்டத்தரணி ஒருவர் மூலம் ஜெயலலிதா அரசுக்கு வந்தது.

சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பை தமிழக அரசு, அமுல் படுத்த தவறியதனால், நீதிமன்றம் அவமதிப்பிற்குள்ளாகியதாக அவர் ரிட்மனு ஒன்றை சுப்ரீம் கோர்ட்டில் தொடுத்தார். சுப்ரீம் கோர்ட் 50 சதவீத இடஒதுக்கீட்டை உடனடியாக நடைமுறைப் படுத்துமாறு தமிழக அரசுக்கு உத்தரவிட்டது.

ஒருபக்கம், சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பை அமுல் செய்தால், தி. மு. க உள்ளிட்ட எதிரணி அதை தங்களுக்குச் சாதகமாக்கும் என்றபயம், இன்னொருபுறம் நீதிமன்ற உத்தரவு. நீதிமன்ற உத்தரவைப் புறக்கணித்தால், காவேரிநீர்பங்கீட்டில்கர்நாடகா சுப்ரீம் கோர்ட் உத்தரவை எதிர்த்தது போல், தமிழகமும் இம்முறை ஆகிவிடும். அப்படியானால் காவிரி நீர்ப் பங்கீட்டில் கர்நாடகாவை குற்றம் சொல்ல முடியாது. மறுபுறம், சுப்ரீம் கோர்ட் உத்தரவை அமுல் செய்தால் அடுத்தமுறை பதவிக்கு வர முடியாது.

சினிமாவில் இரட்டை வேடம் போட்டிருந்த ஜெயலலிதா, இங்கும் அதே பாணியைப் பின்பற்றினார். தனது தலைமைச்செயலரை அனுப்பி கோர்ட்டில் மன்னிப்புக் கேட்டு உறுதிமொழி கொடுத்தார், மறுபுறம், அரசியல் கட்சிகளைக் கூட்டி, கோர்ட்டை எதிர்க்கத் துணிந்த கதையைக்கூறினார்.

**ரகுராம்**

ஆரம்பத்தில் அதை நம்பிய தமிழக அரசியற் கட்சிகள், 31.12.93-இல், 69 சதவீத இடஒதுக்கீட்டைத் தொடர சட்டமன்றத்தில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி, குடியரசுத் தலைவரின் அங்கீகாரம் பெற மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. வழமைபோலவே, அனுப்பி வைக்கப்பட்ட தீர்மானம், குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படாமல், மத்திய அரசால் கவனமாக பூட்டி வைக்கப்பட்டது.

மாதங்கள் கடந்தன சாம்பல் பூத்திருந்த பிரச்சினை அண்ணா பல்கலைக் கழக துணைவேந்தர் அனந்த கிருஷ்ணனின் அறிவிப்பு ஒன்றின் மூலம். ஊதிப் பொறி கிளம்பியது. சுப்ரீம் கோர்ட்டின் உத்தரவின்படி50 சதவீத இட ஒதுக்கீட்டையே செயற்படுத்தப் போவதாக கூறினார் துணைவேந்தர்.

தமிழக அரசியல் களை கட்டத்தொடங்கியது. இடைத்தேர்தல் தோல்வியில் துவண்டு போன தி. மு. க நேற்றுவரை பகைமை பாராட்டிய பாட்டாளி மக்கள் கட்சியோடும் காங்கிரசோடும் கை கோர்த்துக் கொண்டது. கலைஞர் கருணாநிதியும், டாக்டர் இராம்தாசும் ஒரே மேடையில் தோன்றினர். ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தபின் எந்தப் போராட்டத்திலும் நேரடியாக களத்தில் இறங்காத கருணாநிதி நேரில் இறங்கினார். இடஒதுக்கீட்டுப் பிரச்சினையில் தி. மு. கவுக்கு ஆதரவு தருவதாக வாழப்பாடி இராமமூர்த்தி அறிவித்தார்.

மறுமலர்ச்சி தி.மு,க தலைவர் வை. கோபாலசாமி தனியே போராடத் தலைப்பட்டார். மெல்லும் வாய்க்கு அவல் கிடைக்காமல் சினிமாவே கதி என்றிருந்த தாயக மறுமலர்ச்சிக் கழக பொதுச் செயலாளர் டி. இராஜேந்தர் கோட்டை முன் மறியல் செய்ய தயாரானார்.

ஜெயலலிதா சளைக்கவில்லை; அனைத்துக் கட்சிகள் கூட்டம் கூட்டினார். தி. மு.க, காங்கிரஸ், ம.தி மு.க எதுவும் கலந்து கொள்ளவில்லை.

தி மு.க கழகக் கண்மணிகளை போருக்கு தயார் செய்தார் கருணாநிதி. சென்ற ஜூன், 17ஆம் திகதி தமிழக அரசின் தலைமைச் செயலகமான கோட்டை முன் மறியல் நடத்த திட்டமிட்டார் கருணாநிதி. இதனை முறியடிக்க, அன்று தமிழக அரசு பூரண கடையடைப்பு நடக்கும் என அறிவித்தார். பூரண கடையடைப்பை அ.தி.மு.க நடத்தும் நாளில், தி மு.க மறியல் செய்வதா, என ஜூன் 20ஆந் திகதிக்கு மறியலை வைத்தார் கருணாநிதி.

இடஒதுக்கீடு சம்பந்தமான பிரச்சினை மறைக்கப்பட்டு அரசியல் ஆதாயங்கள் தலை தூக்கின. தமிழக அரசு, தனது மேலானஅதிகாரத்தின் மூலம் பூரணகடையடைப்பை வெற்றிகரமாக நடத்திக் காட்டியது. தொடர்ந்து மூன்று தினங்களுக்குள், இட ஒதுக்கீட்டில் மாநில அரசின் கையாலாகாத் தனத்தைக் கண்டிப்பதாகக் கூறி கோட்டைமுன்மறியல் செய்ய தி.மு.க வின் உயர்தலைவர்களோடு தயாரானார் கருணாநிதி.

கலைஞர், தனது வீட்டு வாசலை கடக்க முன்பே கைதானார். பொலிஸ் வாகனத்தில் ஏறு முன், வெளியே பார்த்தார். தொண்டரொருவர் கையிலிருந்த தி.மு. கழகக் கொடி அவரது முகத்தை மறைத்தது. கொடியை ஒதுக்கி, முகம் வெளியே தெரிய கையை உயர்த்திக் காட்டினார். பத்திரிகையாளர்களின் புகைப்படக் கருவிகள் பளிச்சிட்டன. கருணாநிதி நினைத்தது நடந்தது.

கைது செய்யப்பட்டால் ஜாமீனில் வெளியே வரமாட்டேன் என உறுமிய கருணாநிதி, கைதாகிய ஐந்து மணித்தியாலங்களில் விடுதலை செய்யப்பட்டார். மதிய உணவு கூட, அவரது வீட்டிலிருந்தே அவருக்கு எடுத்துவரப்பட்டது. அதே சிறையின் இன்னொரு பகுதியில், மூன்று நாட்களுக்கு முன் கைது செய்யப்பட்டு, பொலிசாரின் கைத்தடியின் வலிமையைஉணர்ந்திருந்த தி.மு.க தொண்டர்கள் பசிக்களைப்புடன் இருந்ததை கருணாநிதிக்கு சொல்லத்தான் யாருமில்லாது போய்விட்டனர்.

அனைத்துக் கட்சியினருடன் டெல்லி பயணம் சென்று, பிரதமரை நேரில் சந்திப்பதன் மூலம் கருணாநிதியின் மறியற் புகழை ஈடுகட்ட எண்ணினார் ஜெயலலிதா. டெல்லி சென்ற ஜெயலலிதா 40 நிமிடங்கள் பிரதமரை சந்தித்தார். முதற் 10 நிமிடங்கள் பரஸ்பர மரியாதை வார்த்தைகளிலும், தன்னுடன் வந்திருந்த அரசியல் கட்சிகளின் பிரமுகர்களை அறிமுகப்படுத்துவதிலும் கழிந்தது. 10 நிமிடங்கள் தன்னுடைய நிலைப்பாட்டை உணர்த்தினர் ஜெயலலிதா, பதிலளித்துப் பேசிய நரசிம்மராவ் ஒரு சில நிமிடங்களுடன் தனது பதிலை தந்தார்.

இவ்வளவு அமைச்சர்களுடனும், அரசியற் கட்சி பிரமுகர்களுடனும் வந்து ஜெயலலிதா சாதித்தது என்ன என்று ஜெயலலிதாவுடன் வந்த கூட்டத்தைப் பார்த்து அதிசயித்துப் போனார்கள். பிரதமரின் செயலக அதிகாரிகள். மாநில முதலமைச்சர்களின் கூட்டத்தில் இது குறித்து பரிசீலிப்பதாகவும், சட்டமா அதிபரைகலந்து பேசுவதாகவும் ராவ் கூறியதை பெரிய வெற்றியாகக் கண்டதுஅ.தி.மு.க.

தமிழகம் திரும்பும் ஜெயலலிதாவுக்கு, பத்திரிகை ஒன்றில் வந்த விளம்பரம் தமிழக அரசை தெளிவாககாட்டி நின்றது. சமூக நீதிகாத்த தமிழினத்தின் உயிர் மூச்சே, எங்கும் எதிலும் வெற்றி கண்ட நீங்கள் டில்லியிலும் வெற்றி கண்டுவர வாழ்த்துகிறோம் என அவ்விளம்பரம் சொல்லியது. ஜெயலலிதா நினைத்ததும் நடந்தது.

நடந்து முடிந்தஇடைத்தேர்தல்களில் தனித்து நின்று கட்டுப்பணமே இழந்த காங்கிரசுக்கு, அ.தி.மு.க வின்துணை மீண்டும் தேவையாயிற்றுஇராஜதந்திர காய் நகர்த்தலில் அனுபவசாலியான ராவ் ஜெயலலிதாவை தன் பக்கம் சார இட ஒதுக்கீட்டை பயன்படுத்த எண்ணினார். தமிழக அரசு 69 சதவீதஇடஒதுக்கீட்டுக்கு வகை செய்யும் வழியில் நிறைவேற்றியிருந்த தீர்மானத்தை குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பியது மத்திய அரசு.

வாழப்பாடியின்முகம் சுருங்கியது. ராவ் விரித்த வலையில் ஜெயலலிதா வீழ்ந்ததாக காங்கிரஸ் நினைத்தது அ தி மு.கவின் வலையில் ராவ் விழுந்ததாக ஜெயலலிதா எண்ணிக் கொண்டார்

அரசியல் ஆதாயம் ஒரு புறமாக, ஜனாதிபயின் ஒப்புதல் தமிழக சட்டசபையின் தீர்மானத்துக்கு கிடைத்தது.

இத்துடன் பிரச்சினை முடிந்து போகவில்லை. வெற்றிக்கு யார் உரிமை கொண்டாடுவது என்பதிலேயே தமிழக அரசியற் கட்சிகள் அடிபிடியில் இறங்கியிருக்கும் வேளையில் இந்த ஒப்புதல் நிலையானதல்ல, அரசியல் சட்டத்திலேயே மாநிலங்களே இட ஒதுக்கீட்டை தீர்மானிக்கும் வகையிலும், சுப்ரீம் கோட்டின் தலையீடு இல்லாத வகையிலும் திருத்தம் கொண்டு வரவேண்டும் என தமிழக அரசியற் கட்சிகள் ஞானோதயம் கண்டுள்ளன.

உயர்நீதிமன்ற நீதியரசர்களான 443பேரில் 12 நீதிபதிகளே பிற்படுத்தப்பட்டவர்கள் என்ற நிலையில் நீதியை எதிர்பார்க்க முடியாதென திராவிடர் கழக தலைவர் வீரமணி கூறியிருக்கிறார்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## சிறுகதை

# பாதுகாப்பு

இருட்போர்வையால் மூடப்பட்டிருந்த அந்தப் பிரதேசத்தின் அமைதியை ஒரு குண்டுச் சத்தம் குலைத்ததைத் தொடர்ந்து பகலைப் பிரதிபலிப்பதுபோன்றதொரு வெளிச்சம் வான்பரப்பில் பரவுகிறது.

ஆழ்ந்த உறக்கத்தில் அமிழ்ந்து போயிருந்த அன்னம்மாவைக் குண்டுச் சத்தம் துயிலெழுப்பிவிடவே திடுக்கிட்டு எழும்பியவள் யன்னலினூடே தெரிந்த வெளிச்சத்தைக் கண்டு ஒரு கணம் பதறிப்போனாள்.

தொடர்ந்து வேட்டுச் சத்தங்கள் கேட்கத் தொடங்கின. வாரிச்சுருட்டிக்கொண்டு படுக்கையை விட்டு எழும்பியவள், கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தாள். வந்தவள் முற்றத்தில் இறங்கி நின்றுகொண்டு சுற்றுமுற்றும் ஒருதரம் நோட்டம்விட்டாள்

இடையிடையே குண்டுச் சத்தங்களும் தொடர்ந்து வேட்டுச் சத்தங்களும் கேட்டுக்கொண்டே இருந்தன. கடற்பீரங்கி வேறு கரையை நோக்கிக் குண்டுகளை ஏவிக் கொண்டிருந்தது. அதன் சத்தம் அவளது செவிப்பறையை அதிர வைத்துக் கொண்டிருந்தது.

''ஏதோ பிரச்சினை போல கிடக்குது. எக்கணம் கண்மூடித்தனமாய் ஷெல் அடிக்கப் போறாங்கள். எதுக்கும் ஆஸ்பத்திரியடிக்குப் போட்டால் நல்லது''

தனக்குள் சொல்லிக் கொண்டே வீட்டைப் பூட்டிக் கொண்டு யாழ் நகரை நோக்கிப் புறப்பட்டுவிட்டாள் அன்னம்மா அவளது கையில் ஒரு பாக் இருந்தது. அதற்குள் சில முக்கியமான பொருள்களையும், இரண்டொரு துணிமணிகளையும் திணித்திருந்தாள்.

அன்னம்மாவுக்கு எப்போதுமே தன்னைப்பற்றி ஒரு பெருமிதமான அபிப்பிராயம் சாதுர்யமாகச் செயற்படுவதில் தன்னை மிஞ்சியவர்கள் கிடையாது எனக் கணக்குப்போட்டு வைத்திருந்தாள் அவள்.

கொட்டடியில் இருந்து நகருக்குப் போகும் வீதியால் அவள் எட்டி நடை போட்டுக் கொண்டிருந்தாள். இன்னும் அவளைப் போலவே பலதரப்பட்ட மக்களும் சைக்கிள்களிலும் மோட்டார் சைக்கிள்களிலும் நடையுமாகப் போய்க் கொண்டிருந்தனர். தூக்க கலக்கத்திலிருந்து மீளாத இளசுகளின் அழுகுரல்களினாலும், பீதியுற்ற மக்களின் அவலக் குரல்களினாலும் அந்த தெருவே அல்லோலகல்லோலப்பட்டது.

பாதுகாப்பு வலயமெனக் குறியீடிட்ட பிரதேசத்துக்குள் வந்தபின் தான் அன்னம்மா சற்று நடையைத் தளர்த்தினாள். மக்கள் எல்லோருமே யாழ் போதனா வைத்தியசாலையைச் சூழவுள்ள பிரதேசங்களுக்குள் தற்காலிக தங்குமிடத்தைத் தேடிக் கொள்ள முற்பட்டனர்.

பழைய பஸ் தரிப்புக்கு முன்னால் அமைந்திருந்த ஒரு மாடிக் கட்டடத்தின் முன் பக்கத்தை அன்னம்மா தெரிவு செய்து கொண்டாள். தனது பாக்கைத்திறந்து ஒரு துண்டை எடுத்தவள், அதனாலேயே அந்தச் சீமெந்துத் தரையில் கிடந்த மண்ணைத் தட்டி விட்டு, அதே துணியை நிலத்தில் விரித்தாள். பாக்கைத் தலைக்கு அணையாக வைத்துக் கொண்டு அந்த இடத்தில் நீட்டி நிமிர்ந்து படுத்துக் கொண்டாள்.

'ம்!......'

நிம்மதிப் பெருமூச்சொன்றை வெளிப்படுத்தியவளுக்குத் தனது கணவன் கொழும்பில் கடை வைத்திருந்த காலம் நினைவுக்கு வந்தது. அதைத் தொடர்ந்து தானும் பிள்ளைகளுமாகப் புகைவண்டியில் கொழும்பிற்குப் பயணம் செய்த காலமும், தான் புகைவண்டியில் ஏறியவுடனேயே அவசரமாக இடம் பிடித்துப் பிள்ளைகளையும் படுக்க வைத்து விடும் சாதுர்யத்தையும் நினைவில் மீட்டுக் கொண்டாள்.

அருகில் ஆளரவம் கேட்டு அவளது சிந்தனை கலைந்தது

'ஆச்சி!'

பெண் குரல் ஒன்று கேட்டது. தலையைச் சற்று உயர்த்தியவள் 'ஆரது?' என்றாள். இருளாக இருந்தாலும் உருவங்களை இனங்காணக் கூடிய ஒரு வெளிப்பு இருந்தது.

'ஆச்சி! என்னையும் இந்தப் பிள்ளையையும் உந்தச் சுவர்க்கரையில படுக்க விடுறியளே! பிள்ளைக்கு நல்ல தடிமல். காத்துப்பட்டாக் கூடாது. அதுதான்...'

மெதுவாக இழுத்தாள், அந்தப் பெண். அன்னம்மாவுக்குக் கோபம் பற்றிக் கொண்டு வந்துவிட்டது. நறுக்கெனப் பதில் சொன்னாள்.

'நானும் வருத்தக்காரிதான். நீ வேணுமெண்டால் வேறை இடம்பாத்துக்கொள்'

ஆண் குரலொன்று அவளை அழைத்தது.

'வாரும் தமயந்தி, நாங்கள் அங்காலை போய்ப் பாப்பம்' வசதியான இடம் ஏதும் இருக்கும்'

அவர்கள் தேடிய வசதியான இடம் என்ன கட்டில் மெத்தையா? வெறும் கட்டிடங்களின் முகப்புத் தரையைத்தான் அவர்கள் தேடிப் போய்க்கொண்டிருந்தனர், அந்தப் பெண் தமயந்தியின் கையிலிருந்த இரண்டு மாதங்கூட நிரம்பாத குழந்தை இடைக்கிடை வீறிட்டு அழுது கொண்டிருந்தது.

அவர்கள் அப்பாற் போனதும் அன்னம்மா சரிந்து படுத்துக் கொண்டாள். அவளது அடி மனதில் இனம்புரியாத ஒரு நெருடல் தோன்றத்தான் செய்தது. அவளது எண்ணங்களோ அவளை முந்திக் கொண்டுவிட்டன.

'என்ரை மகள் பிரேமாவையும் இஞ்சையே வைச்சிருந்தால், அவளும் இப்பிடித்தான் பிள்ளை குட்டியளையும் இழுத்துக் கொண்டு ஓடித்திரிய வேண்டி இருந்திருக்கும். நல்ல காலம் அவளை ஒரு மாதிரிக் கனடா மாப்பிள்ளைக்குக் கட்டிக் குடுத்ததால அவள் அங்கை போய் நிம்மதியாய்க் குடித்தனம் நடத்துகிறாள். நான்தான் கிடந்ததெல்லாத்தையும் வித்துக் குடுத்திட்டு ஒட்டையாண்டியாய்ப் போனன். ம்! ...... பிள்ளையள் நல்லாயிருந்தாக் காணும் எனக்கென்னத்துக்குப் பொருளும் பண்டமும். நான் ஒரு சீவன்தானே. எப்பிடியும் சீவிச்சுக் கொள்ளுவன். நான் தனி ஆளாய் இருந்தபடியாத்தானே ஓடிவந்து ஒரு ஒதுக்குப்புறமாய், நல்ல பாதுகாப்பான இடமாப் பாத்துப் பிடிச்சுக் கொண்டன். இனி இதிலை நிம்மதியாய்க் கிடந்திட்டு விடிய எழும்பிப் போகலாம்'

ஏதோ, தான் படுத்திருக்கும் இடத்தை தானே சொந்தமாக வாங்கி விட்டது போன்றதொரு நினைப்பில் அன்னம்மா மிதந்தாள். குண்டுச் சத்தங்களின் அதிர்வுகளும் வேட்டுக்களும் கேட்ட வண்ணமிருந்தன. அவள் தனக்குள் நினைத்துக் கொண்டாள்.

'மண்டை தீவால ஆமி வெளிக்கிட்டாலும் இஞ்சை வந்து கொள்ள மாட்டான் இது பாதுகாப்பு வலயமெல்லே. அதோடை பெடியளும் விடமாட்டாங்கள்'

பெடியளை நினைத்ததும் அவளுக்குத் தனது பிள்ளைகளின் நினைவு வந்துவிட்டது. மூத்தவன் சுதன், சுவிஸ் நாட்டில், அங்கேயே, தான் விரும்பிய ஒரு பெண்ணைத் திருமணஞ் செய்து குடியும் குடித்தனமுமாய் வாழ்ந்து கொண்டிருக்கிறான். அவன் தாயையோ, தாய்நாட்டையோ நினைப்பதுமில்லை. திரும்பிப்பார்ப்பதுமில்லை. இளையவன் சுரேஸ் கனடாவில் அகதி அந்தஸ்த்துடன் அவனது காலம் போகிறது. அவன்தான் இடைக்கிடை அன்னம்மாவிற்கு ஏதும் பணம் அனுப்பிக் கொள்வதுண்டு. அத்துடன் தங்கை பிறேமாவையும் தன்னுடன் கூட அகதியாய்த் தங்கி இருக்கும் ஒரு பையனுக்குத் திருமணம் செய்து கொடுப்பதில் மும்முரமாய் இருந்து செயற்பட்டவன். அவன் மேல் எப்போதும் அன்னம்மாவுக்கு ஒரு தனிப்பாசம் நிலைத்திருக்கிறது என்பது அவளது பேச்சிலிருந்து தெளிவாகிய விடயம்.

'சுரேஸுக்கும் நல்ல ஒரு பெட்டையாய்ப் பார்த்துக் கலியாணஞ் செய்து வைச்சிட்டனென்டால் நிம்மதியாய்க் கண்ணை மூடலாம், அவனுக்குப் பொம்பிளை அனுப்புற சாட்டிலை நானும் ஒருக்கால் கொழும்புக்குப் போய் சுரேஸனோடை கதைச்சுப் போட்டு வரலாம். அல்லது அவனைக் கொழும்புக்கே கூப்பிட்டுக் கலியாணத்தைச் செய்து அனுப்பிப்போட்டும் வரலாம்'

அன்னம்மாவின் கற்பனையில் சுரேஸுக்குப் பொருத்தமான பெண்பிள்ளையைத் தேடும் முயற்சி மும்முரமாய் நடந்துகொண்டிருந்தது. ஊருக்குள் இருக்கும் பெண்கள் ஒருவரும் அவளது மனதிற்குப் பிடித்தமானவர்களாய்த் தோன்றவில்லை. புரோக்கர் மாரிட்டைச் சொல்லித்தான் பார்க்கவேணும். அழகு, குணம், பணவசதி எல்லாம் பொருந்தி வரவேணுமே என்ற சிந்தனையுடன் தூக்கத்தின் பிடியில் சிக்கிக் கொண்டாள்

கூய்ங்ஸ்........

கூவிய வாறு வந்த 'ஷெல்' எழுப்பிய ஒலி தூக்கத்திலிருந்த அன்னம்மாவின் காதுகளுக்கு எட்டியதோ! இல்லையோ! யார் கண்டது.?

**மலரன்னை**

பேரிடியைத் தொடர்ந்து எங்கும் புகை மண்டலம், கந்தக நெடியும், புகையும் பாதுகாப்புப் பிரதேசத்தில் பதுங்கியிருந்த மக்களின் நாசிகளையும், கண்களையும் ஊடறுத்துத் தாக்கிப் பெரும் எரிச்சலையும் நமைச்சலையும் உண்டு பண்ணின.

மக்களின் அவலக் குரல்கள் அந்த இரவின் நிசப்தத்தை கிழித்துக் கொண்டு வெளி வந்த போது.....................

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பொறுப்பதிகாரியின் கை 'வயர்லெஸ்' ஐ இயக்கிக் கொண்டிருந்தது.

தலைமைச் செயலகத்துடன் தொடர்பு.

அங்கிருந்து கூட்டுப்படைத் தலைமையகத்துடன் தொடர்பு

மீண்டும் அங்கிருந்து பலாலி இராணுவ முகாமுடன் தொடர்பு.

இறுதியாகமண்டைதீவுஇராணுவ முகாமுடன் தொடர்பு.

வருத்தம் தெரிவித்தலும் வாக்குறுதிகளும் பரிமாற்றம்.

இப்படியான தொடர்புகள் ஒரு புறம். மறு புறத்தில்......

யாழ். பழைய பஸ் தரிப்பு நிலையத்தில் விழுந்த ஷெல் வெடித்துச் சிதறியதால் அந்த இடத்தைச் சூழவுள்ள பகுதிகளில் தஞ்சமடைந்த மக்களிற் சிலர் கொல்லப்பட்டும், பலர் காயமடைந்தும் இரத்தக் களரியில் நீந்திக் கொண்டிருக்கின்றனர்.

யாழ். போதனா வைத்தியசாலை உயிர்காக்கும் பணியில் சுறுசுறுப்புடன் இயங்கிக் கொண்டிருக்கின்றது. அங்கு கடமையில் ஈடுபட்டிருக்கும் டாக்டர்கள், நர்ஸ்கள், ஊழியர்கள் என்று எல்லோரும் ஓடியாடிப் பணிபுரிந்து கொண்டிருக்கின்றனர்.

அந்த அவலமான இரவு விடிந்தபோது......................

(10ஆம் பக்கம் பார்க்க)

# மீன்களின் பலிபீடம்

கடல் என்றாலே அதில் உள்ள சின்ன மீன்கள் முதல் கப்பல்களைக் கவிழ்த்து விடும் மிகப் பெரிய திமிங்கிலங்கள் வரை அங்கே வாழும் பல விதமான உயிரினங்கள் தாம் நம் நினைவிற்கு வரும். இருந்தாலும் எதற்குமே விதிவிலக்கு உண்டு என்பது போல் சிறு மீன்கள் முதல் திமிங்கிலங்கள் வரை எந்தவொரு உயிரினமும் வாழாத, வாழமுடியாத ஒரு கடல் இன்றும் உலகில் உள்ளது.

அதன் தன்மைக்கு ஏற்றபடி ''டெட்ஸீ'' என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் அந்த 'சாக் கடல்'' ஜோர்டானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் அமைந்துள்ளது. இந்தக் கடலில்தான் எந்தவொரு மீனோ. தாவரமோ கிடையாது.

நாற்பத்தெட்டு மைல் நீளமும் பதினொரு மைல் அகலமும் கொண்ட இந்தச் சாக் கடலில் இன்னோர் அதிசயம் என்னவென்றால் இந்தக் கடலை நேரில் பார்ப்பதற்குக் கிணற்றுக்குள் இருக்கும் தண்ணீரை அதன் மேற்பரப்பில் நின்று பார்ப்பது போலிருக்கும். தரைப்பரப்பில் இருந்து, இந்தக்கடல் தாழ்ந்து அமைந்திருப்பதே இவ்வாறு இது காட்சி அளிப்பதற்கு காரணம். இது தரை மட்டத்தில் இருந்து 1300 அடி கீழே பள்ளமாக அமைந்துள்ளது, இந்தக்கடல் இதனால் உலகிலேயே மிகவும் தாழ்வான கடல் என்ற பெயரையும் இந்தச் சாக் கடல் பெற்றுள்ளது.

இந்தக் கடலில் மீன்கள் ஏன் உயிர் வாழ்வதில்லை?

பொதுவாக கடல் தண்ணீரில் நான்கு முதல் ஆறு சதவீதம் உப்பு நிறைந்திருக்கும் ஆனால் செத்த கடலின் தண்ணீரிலோ 23 முதல் 25சதவீதம் வரை உப்பு நிறைந்திருக்கின்றது. இவ்வளவு அதிகளவு சாதாரண உப்போடு பல இரசாயன உப்புக்களும் இக் கடல் நீரில் கரைந்திருப்பதனால் இக்கடலின் நீர் ஏறத்தாழ விளக்கெண்ணெய் மாதிரிப் பிசுபிசுவென அதிக அடர்த்தியாக உள்ளது இதன் காரணமாக இந்தக் கடலில் மனிதர்களாலேயே நீந்த முடியாது.

மற்றக் கடல்கள் பரப்பளவில் மிகப் பெரியவை மேலும் நல்ல தண்ணீரைக் கொண்ட பல ஆறுகள் தம்முடன் இணையும் வாய்ப்பை பெற்றுள்ளன. இதனால் இந்தக் கடல்களின் தண்ணீரில் உப்பின் சதவீதம் அதிகரிப்பது இல்லை. ஆனால் செத்த கடலில் அப்படி இல்லை. ''ஜோர்டான் ஆறு'' என்ற ஒரே ஆறு தான் செத்த கடலுடன் கலக்கிறது.

ஆனால் ஆரம்ப காலத்தில் இந்தக் கடல் மிகவும் தூய்மையான நீரைக் கொண்ட ஒரு மிகப்பெரிய ஏரியாக இருந்ததாம். பல இலட்சம் வருடங்களுக்கு முன்பு, அதாவது உலகில் உயிரினம் தோன்றியிராத காலத்தில் இந்தக் கடல், மத்திய தரைக் கடலை விட ஆயிரத்து நானூறு அடி அதிகமான உயரத்தில் அமைந்த நல்ல தண்ணீர்க் கடலாக இருந்ததாம். ஆனால் நாள் செல்லச் செல்ல அவ்வப்போது உலகில் ஏற்பட்ட வறட்சிகள், நிலநெகிழ்வுகள் இந்தக் கடலின் அளவைக் குறைத்து இதை ஒரு பள்ளத்துக்குள் தள்ளி விட்டன என்கிறார்கள் இந்தக் கடலைப் பற்றி ஆராய்ந்த நில- மற்றும் நீரியல் நிபுணர்கள்.

மேலும் இந்தக் கடலில் ''மீன்களின் பலிபீடம்'' என்றழைக்கப்படும் ஓர் இடமும் உள்ளது.

ஜோர்டான் ஆறு இந்தக் கடலுக்குள் கலக்கத் தொடங்கும் இடமே அவ்வாறு அழைக்கப்படுகிறது,

ஏன் அப்படி?

நல்ல தண்ணீரைக் கொண்ட ஜோர்டான் ஆறு இந்தக் கடலுக்குள் நுழையும் போது, அந்த ஆறுடன் வந்த மீன்கள் இந்தக் கடலுக்குள் நுழையும் அல்லவா? நுழைந்த சில நிமிடங்களிலேயே அவை இந்தக் கடலின் நீர்த்தன்மை காரணமாகச் செத்து விடும் செத்த இந்த மீன்களைத் தூக்கிச் செல்லக் கழுகுகளும் மற்ற பறவைகளும் இந்த இடத்தில் பறந்தபடி இருக்கும்.

இந்தக்கடலில் மீன்வளம் இல்லையென்றாலும், பல வகை இரசாயன உப்புக்கள் இந்தக் கடலில் உள்ளதால் இந்தக்கடல் ''இரசாயன உப்புக்களின் கிடங்கு'' என்றும் அழைக்கப்படுகிறது. இந்தச் செத்த கடலில் பொட்டாஷ், மக்னீசியம் குளோரைட்டு, பிரோமின் போன்ற இரசாயன உப்புக்கள் பெருமளவில் உள்ளன, செயற்கை உரம் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பொட்டாஷ்உப்பு மட்டுமே ஏறத்தாழ 20 இலட்சம் டன் அளவுக்கு இந்தக் கடலில் உள்ளது எனக் கணக்கிட்டுள்ளனர்?

இந்தக் கடலின் தண்ணீரை மனிதன் குடித்தால் என்னவாகும்.

ஒருபிடி தண்ணீரைக் குடித்தால் ஜுரம், வாந்திபேதி ஏற்படும். ஒரு டம்ளர் குடித்தால், அதைக் குடிக்கும் முன்பு இறுதிச்சடங்குகளுக்கு ஏற்பாடு செய்துவிட வேண்டியதுதான்.

## தேர்தலின்

தாகவும் வடபகுதி இராணுவ நடவடிக்கை குறித்து இதில் ஆராயப்பட்டதாகவும், தகவல்கள் கூறுகின்றன.

தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் கொந்தளிப்பான சூழலில் பல உயர் இராணுவ அதிகாரிகள் அரசியல் கட்சிகளுடன் இணைவதற்கான முயற்சி மேற்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக பூநகரியில் நடைபெற்ற தாக்குதல் குறித்து நடைபெற்ற விசாரணையில் குற்றம் சாட்டப்பட்டதை தொடர்ந்து பிரிகேடியர் கெமுனுகுலதுங்க, பிரிகேடியர் ஜாலிய நம்முனி போன்றோர் அரசியல் கட்சிகள் பக்கம் சாய்வதற்கு முயற்சித்துள்ளார். இதனைத் தொடர்ந்து இவர்கள் மீதான குற்றம் மீளப்பெறப்பட்டதுடன், ஏனையவர்களுக்கு குற்றம் இடை நிறுத்தப்பட்டுள்ளது. இத்தகைய நிலைமைகள் விலக்கப்பட்டால் மட்டுமே எதிர்காலத்தில் யுத்தத்தை வெற்றி நோக்கில் வழியமைத்து கொண்டுசெல்ல முடியும் என்று ஜனாதிபதிக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆலோசனை கூறியுள்ளார் என்றும், உடனடியாக பிரிகேடியர் குலதுங்கா; நம்முனி போன்றோர் குற்றம் மீளப்பெறப்பட்டு விட்டதாகவும் ஏனையோர் தொடர்பாக விரைவில் தீர்மானம் எடுக்கப்படும் என அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவுகள் எப்படி வரும் என்பதைவிட தேர்தல் முடிவுற்றவுடன் வடக்கு - கிழக்கு பகுதி மீதான இராணுவத் தாக்குதல் பலமாக இருப்பதற்கு ஏற்ற வகையில் தயார்படுத்தப் படுவதாகவும் அதற்கான சூழ்நிலை நன்கு கண்டு கொள்ளக் கூடியதாக இருக்கின்றது தேர்தல் முடிவு எப்படி இருக்கும் என்பதைவிட தேர்தல் முடிவின் பின்னர் எப்படி இருக்கும் என்ற கேள்வியே இப்போது மேலோங்கி இருக்கின்றது. தேர்தல் முடிவு பொது ஜன ஐக்கிய முன்னணி வெற்றி பெற்றதும் ஜனாதிபதி தமது அதிகாரத்தின் கீழ் யுத்தத்தை நடத்த முன்னணி ஒப்புதல் பெறப்படுமா? அல்லது தேர்தலில் ஐ. தே. க. வெற்றி பெற்றால் எப்போது யுத்தம் ஆரம்பிக்கும்? என்பதுவே இப்போதைய கேள்விகளாகும்.

## இடஒதுக்கீட்டை

எனவே தொடங்கிய போராட்டங்கள் தொடர்ந்தே செல்லும்எனதி.மு.க.ம.தி.மு க.என்பனஅறிவித்துள்ளன. இவற்றின்நோக்கம்சரியானதே. ஆனால் அதை அடையும்முன் தமிழக அரசியலின் சாபக்கேடுகள் மீண்டும் தலைதூக்க மாட்டாது என்பதை நிச்சயித்துக் கொள்ள முடியாது.

குடியரசுத்தலைவரின் ஒப்புதலைப் பெற்றதுடன் மாத்திரமே பணிமுடிந்ததாக ஜெயலலிதா இருப்பாராயின் மீண்டும் மறியற்போராட்டங்கள், பேரணிகள், கடையடைப்புக்கள்நடக்கும்அந்நிலையில் இலக்குத்தவறிய நிலையிலேயே இடஒதுக்கீடும் செல்லும் இவற்றினால் பாதிக்கப்படப்போகும்மாணவர்களின், நிலைமை எண்ணியாவது தமிழக அரசியல்வாதிகள் ஒன்று சேர்ந்து வெற்றிபெற போராடுவார்களா என்பது கேள்விக்குறியே


சில்லாலை

புனித கதிரை மாதா திருவிழா

மேற்படி திருவிழா இம்மாதம் 14-ம் திகதி பிற்பகல் 4 மணிக்கு திவ்விய நற்கருணை ஆராதனையும் 15-ம் திகதி காலை 8.00 மணிக்கு திருவிழா திருப்பலியும் நிறைவேற்றப்படும்.

ஆலய சபை
சில்லாலை புனித கதிரை மாதா ஆலயம்
(9064)

பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கான

B. A.

விரிவுரைகள் ஆரம்பம்

14 - 08 - 94

(9-மணி)

விபரங்களுக்கு

S. அருள்நங்கை

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி - யாழ்.

(சி-10090)


# அறிவித்தல்

## ஈழத்து நூல், சஞ்சிகை, ஓவியம், சிற்பம், புகைப்படம், பாரம்பரிய மருத்துவக் கண்காட்சியும், கருத்தரங்கும் 1994

வருடாந்தம் எம்மால் நடாத்தப்படுகின்ற மேற்படி கண்காட்சி 1994 செப்ரம்பர் மாத இறுதியில் இடம்பெறும்; இக்கண்காட்சியையொட்டி பின்வரும் போட்டிகளை நடாத்தத் தீர்மானித்துள்ளோம்:-

அ. சிறந்த சனசமூக நிலையம்
ஆ. சிறந்த பாலர் பாடசாலையும் ஆசிரியையும்
இ. ஓவியப் போட்டி
ஈ. புகைப்படப் போட்டி
உ. சிறந்த நூல்களுக்கான போட்டி:-
1. நாவல் 2. சிறுகதை
3. கவிதை 4. நாடகம்
5. அறிவியல் 6. குழந்தை இலக்கியம்
ஊ. சிறந்த நூல் கட்டமைப்பு
எ. சிறந்த கையெழுத்துச் சஞ்சிகை

**அ. சிறந்த சனசமூக நிலையம்**

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் சனசமூக நிலையங்கள் கீழ்க்காணும் முகவரியுடன் எழுத்து மூலம் இன்றேல் நேரில் 24-08-94ஆம் திகதி நண்பகலுக்கு முன்னர் தொடர்பு கொள்ளுக.

**ஆ. சிறந்த பாலர் பாடசாலையும் ஆசிரியையும்**

இப்போட்டியில் பங்குகொள்ள விரும்பும் பாலர் பாடசாலைகளும், பாலர் பாடசாலை ஆசிரியைகளும் கீழே உள்ள முகவரியுடன் 24-08-94-ம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளுக.

**இ. ஓவியப் போட்டி**

இப்போட்டி 03 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு நடாத்தப்படும்;
1) 12 வயதுக்கு உட்பட்டோர்
2) 12 வயதுக்கும் 15 வயதுக்கும் உட்பட்டோர்
3) 15 வயதுக்கு மேற்பட்டோர்

இப்போட்டி யாழ் நகரில் இடம்பெறும்; இப்போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் 94-08-24-ம் திகதிக்கு முன்னர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளுக.

**ஈ. புகைப்படப் போட்டி**

இப்போட்டியில் பங்குகொள்ள விரும்புவோர் 94-08-24-ம் திகதிக்கு முன்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளுக;

**உ. சிறந்த நூல்களுக்கான போட்டி**

1993-ம் ஆண்டு யூன் மாதத்திலிருந்து 1994-ம் ஆண்டு யூன் மாதம் வரை வெளிவந்த உள்ளூர் எழுத்தாளர்களது படைப்புகள் இப்போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படும்; இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் எழுத்தாளர்கள் தங்கள் படைப்புக்களில் 03 பிரதிகளைக் கீழ்க்காணும் முகவரிக்கு 94-08-24-ம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னதாக நேரடியாகக் கையளிக்கும் வண்ணம் கேட்டுக் கொள்ளுகின்றோம்

போட்டிகள் சம்பந்தமான விபரங்களை கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளுக.

**ஊ. சிறந்த நூல் கட்டமைப்பு**

இப்போட்டியில் உள்ளூர் அச்சக உபகரணங்களைக் கொண்டு உள்ளூரில் அச்சிட்டு வெளியிடப்பட்ட நூல்கள் சேர்த்துக் கொள்ளப்படும். இதில் பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் தங்கள் வெளியீட்டில் 03 பிரதிகளை 94-08-24-ந் திகதிக்கு முன்னதாக கீழ்க்காணும் முகவரிக்கு நேரிலோ இன்றேல் தபால் மூலமோ கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**எ. சிறந்த கையெழுத்துச் சஞ்சிகைகள்**

இம்மாவட்டத்தில் இயங்கும் பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் பாடசாலை மட்டத்தில் வெளியிடும் கையெழுத்துச் சஞ்சிகைகள் இப்போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படும். இதில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் தம் வெளியீட்டின் ஒரு பிரதியினைப் பாடசாலையின் அதிபரது உறுதியுரையுடன் 94-08-24-ந் திகதிக்கு முன்னதாக கீழே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்,

இக்கண்காட்சியில் தங்களுடைய ஆக்கங்களை காட்சிக்கு வைப்பதற்கு விரும்பும் பாரம்பரிய வைத்தியர்கள், ஓவியர்கள், சிற்பவல்லுநர்கள், புகைப்படக் கலைஞர்கள், எழுத்தாளர்கள், கல்விமான்கள், வெளியீட்டாளர்கள் ஆகியோரை எம்மோடு 1994-08-24ம் திகதி பகல்12 மணிக்கு முன்னர் நேரிலோ இன்றேல் கடிதம் மூலமோ தொடர்பு கொள்ளும்படியும் தயவுடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

உள்ளூராட்சித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
94-08-10

சுந்தரம் டிவகலாலா
பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம் / கிளிநொச்சி மாவட்டங்கள்
இணைப்பாளர், கண்காட்சிக் குழுக்களின் சார்பில்.


அன்பளிப்பு: யாழ். மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கம்,
183, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம், (சி-10097)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

# 10-வது பாராளுமன்ற தேர்தல் முடிவுகள் அரசியல் யாப்பை கேள்விக்குள்ளாக்குமா?

சிறிலங்காவின் பத்தாவது பாராளுமன்றத் தேர்தல் ஏதோ ஒரு வகையில் அரசியல் யாப்பு நெருக்கடியை உருவாக்கும் என்றே அரசியல்விமர்சகர்களால் கருதப்படுகின்றது. ஐக்கிய தேசியக்கட்சி மிகவும் பலமான நிலையில், உருவாக்கிய ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் இவ் அரசியலமைப்பு, கட்சி பலவீனப்பட்டுள்ள இன்றைய நிலையில், அரசியல் அமைப்பும் பலவீனப்பட்டு கேள்விக்கும், சர்ச்சைக்கும் உரியதாக மாறியுள்ளது.

சிறிலங்காவின் பத்தாவது பாராளுமன்றத்தேர்தல் முடிவானது அரசியல் விமர்சகர்களின்கருத்தின்படியும், கருத்துக் கணிப்புக்களினதும் அடிப்படையிலும்எதிர்த்தரப்பினரானபொதுஜனஐக்கிய முன்னணியினருக்கேசாதகமாகஅமையலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதேசமயம் சில கருத்துக்கணிப்புக்கள், தேர்தலில் எக்கட்சியினரும் அறுதிப் பெரும்பான்மை பெறவாய்ப்பில்லை எனவும், சிறுபான்மை இன உறுப்பினர்களினதும் தேசிய பட்டியல் எம்.பிக்களினதும் நியமனம் பொறுத்தே ஆட்சி அமையலாம் எனக் கூறப்படுகின்றது.

ஆனால் இதில்தேர்தல் முடிவுகள் எதுவாகஇருப்பினும்இதனால் ஒருஅரசியல் அமைப்பு நெருக்கடியொன்று உருவாவதற்கான வாய்ப்புக்கள் தவிர்க்கமுடியாதே உள்ளன இவ் நெருக்கடியானது, ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா அரசியலமைப்பு விதிகளில் உள்ள ஜனாதிபதிக்கான அதிகாரங்களை பயன்படுத்துவதிலேயே முழுக்கவனத்தையும்செலுத்துவாரா? அன்றி பாராளுமன்றத் தேர்தலில் மக்களின்தீர்ப்புக்குஏற்பநடந்துகொள்வாரா என்பதைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும்.

சிறிலங்காவின் அரசியல் யாப்பு ஏற்கனவே பல ஓட்டைகளையும், தெளிவான வரையறைகள் அற்றதாக இருப்பினும் ஐக்கிய தேசியக் கட்சி மத்தியிலும், மாகாணங்களிலும் பலமாக இருந்த வேளை அவை உணரப்படவில்லை. இது குறித்து வெளிவந்த எதிர்ப்புக்களும் கண்டு கொள்ளப்படவில்லை என்றே கூறவேண்டும்.

## மத்திய அரசும் மாகாண அரசும்

எடுத்துக்காட்டாக மாகாண சபைகள் அமைக்கப்பட்டபோது வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய மாகாண சபைகளை ஐ.தே.கவே கைப்பற்றிக் கொண்டது, ஆகையினால், சிங்களவரைப் பெரும்பான்மையாகக் கொண்ட மாகாணங்களில் அதிகாரப்பரவலாக்கல் தொடர்பான-அதாவது மத்திய-மாகாண அரசுகளுக்கிடையிலான அதிகார வரையறை-பிரச்சினை எழவில்லை.

இதேசமயம், வடக்கு-கிழக்கு மாகாணங்களின் அதிகாரங்கள் தொடர்பாகச் சர்ச்சை எழுந்தபோது அவை கண்டு கொள்ளப்படவில்லை. வடக்கு-கிழக்கு மாகாண சபை மிகச் சொற்ப அதிகாரங்களுடன் காலம் தள்ளவேண்டியிருந்தது. தேவை ஏற்பட்ட போது அச் சொற்ப அதிகாரங்களும், மத்திய அரசால் பிடுங்கப்பட்டே வந்தன.

இதில், இன்னுமொரு ஆனால், முக்கியமான தென்னவெனில், ஆரம்பத்தில் மாகாணசபை உருவாக்கத்தையும், அதற்கான அதிகாரப்பரவலாக்கலையும் எதிர்க்கட்சிகள், குறிப்பாக பிரதான எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சி எதிர்த்ததாகும். ஆனால், சுதந்திரக்கட்சி மிகவும் பலவீனமாக இருந்ததினால் இதுவும் கண்டு கொள்ளப்படவில்லை.

இந்நிலையில், அரசியலமைப்பு குறித்துபெரும்நெருக்கடி எழவில்லை. மாறாகதமிழருக்குஅதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன என்ற கூக்குரலே கிளம்பியது ஆனால், பின்னர் சுதந்திரக்கட்சி மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டு, சில மாகாண சபைகளைக் கைப்பற்றியபோதே அரசியலமைப்பின் பிரகாரம் மாகாண சபைகளுக்கு அதிகாரம் எவையும் இல்லை என்பதை அக்கட்சி உணர்ந்து கொண்டது.

இதனை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதித்தலைவியும், மேல் மாகாணசபை முதலமைச்சருமான சந்திரிகா குமாரணதுங்கா, ஒருசமயம் ''மாகாணசபைகளுக்கு தமது காரியாலயத்திற்கென கதிரை வாங்குவதற்குக்கூட அதிகாரம் கிடையாது'' எனத் தெளிவாகவே பிரதிபலித்தார். இந்நிலையில்தான் சிறிலங்கா அரசியல் யாப்பின் பிரகாரம் உருவாக்கப்பட்ட மாகாணசபைகள் அர்த்தமற்ற தொன்றாகின.

## ஜனாதிபதியும் பாராளுமன்றமும்

இதை ஒத்த நிலை ஒன்று இப் பொதுத்தேர்தலின் முடிவின் பின்னர் பாராளுமன்றத்திற்கும் ஏற்படுமா? என்பதே இன்றுள்ள பிரதான கேள்வியாகும். இவ்வாறு நிகழ்வதற்கான சில சமிக்ஞைகளும் ஓரளவிற்குத் தெரிவதாகவே உள்ளது. ''எதிர்வரும் தேர்தலில் யார் வெற்றி பெற்றாலும் தனது அனுமதிக்குப் பின்னர்தான் அமைச்சரவை அமைக்க முடியும்', என்றும் ''பாராளுமன்றம் புதிதாக அமைக்கப்பட்டாலும், முப்படைகளும் பொலிசாரும் தமக்குக் கீழேயே செயற்படவேண்டும்'' என்பது போன்ற டி. பி விஜேதுங்காவின் அண்மைய அறிவிப்பு இதனைத் தெளிவுபடுத்துவதாகவே கொள்ளமுடியும்.

ஆனால், சிறிலங்கா அரசியலமைப்பின் பிரகாரம் நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதிக்கு டி. பி விஜேதுங்கா கூறுவது போன்று அதிகாரங்கள் யாவும் உள்ளன என்பது மறுப்பதற்கில்லை சிறிலங்கா அரசியல் யாப்பின் பிரகாரம், ஜனாதிபதி அரசின் தலைவர் என்பது மட்டுமல்ல, பிரதமரை நியமிப்பது. அமைச்சர்களை நியமிப்பது என்பதோடு அமைச்சரவையின் தலைவர் என்ற பொறுப்பும் ஜனாதிபதியிடமே உள்ளது. இதில் பிரதமர் பதவிக்கு யாரைத் தெரிவு செய்வதென்பதற்கோ அன்றி எந்த அமைச்சு பொறுப்பையும்தான்வைத்துக் கொள்வதறகோ அல்லது தான்தெரிவுசெய்பவருக்கு வழங்கவோ ஜனாதிபதிக்குப் பூரண அதிகாரம் உண்டு. ஜனாதிபதி தான் விரும்பியவரை பிரதமராகவும் நியமனம் செய்யலாம்.

இந்நிலையில்தான் தேர்தல்முடிவு எதிர்பார்க்கப்படுவது போன்று அமையுமானால் - அதாவது பொதுஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையோ அன்றிக் கூடுதலான ஆசனங்களைபோ கைப்பற்றுமானால் - அரசியல் நெருக்கடி உருவாவது தவிர்க்க முடியாத ஒரு விளைவாகவே உருவாகும்.

இந் நெருக்கடியானது பிரதம மந்திரியாக எவரை அழைப்பது என்பதில் இருந்து தொடங்கி அமைச்சரவைத் தீர்மானங்களுக்கு அனுமதி வழங்குதல் தொடர்பான விடயங்கள் வரை நீடித்துச் செல்லக்கூடியதாகும். இதில் எதிரணியினர் தேர்தலில் வெற்றி பெற்றால் யாரை பிரதமராக அழைக்க வேண்டும் என்பது தொடர்பாக ஏற்கனவே சர்ச்சை கிளர்ந்துள்ளது.

## எதிரணியினரின் கோரிக்கை

பொதுஜன ஐக்கிய முன்னணி தேர்தலில் வெற்றி பெறுமானால் சுதந்திரக்கட்சியின் பிரதித்தலைவியான சந்திரிகா குமாரணதுங்காவையேபிரதமர் பதவிக்கு அழைக்க வேண்டும் எனஎதிர்த்தரப்பினர் கோரத் தொடங்கியுள்ளனர். இதற்கு ஏற்றால் போல் எதிர்க்கட்சித் தலைவியும், சுதந்திரக்கட்சித் தலைவியுமான சிறிமாவோ பண்டாரநாயக்காவும் பச்சைக் கொடிகாட்டியுள்ளார்.

ஆனால் எதிர்க் கட்சியினரின் கோரிக்கையை ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா ஏற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் மிகவும் அரிதாகவே தெரிகின்றது. அரசியலமைப்பில் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தனக்கு விருப்பமானவர்களை அழைக்க விரும்புவதாகத் தெரிகின்றது.

இதன் பிரகாரம் எதிர்க் கட்சித் தலைவியான சிறிமாவோ பண்டாரநாயக்காவை டி. பி. விஜேதுங்கா பிரதமர் பதவிக்கு அழைக்கலாம். இதனை எவரும் அரசியல் அமைப்புரீதியாக எதிர்க்க முடியாது போகலாம். ஏனெனில் ஜனாதிபதி 'அவரதுகருத்துப்படி' பாராளுமன்றத்தின் நம்பிக்கையை அதிகம் பெறுவதற்கு வாய்ப்புள்ளவரை பிரதமராக நியமிக்கலாம்.

இதனை ஜனாதிபதிச் செயலகமும் ஒருவகையில் ஊர்ஜிதம் செய்துள்ளது என்றே கூறவேண்டும். இதை உணர்த்துமாப் போன்றே பொதுஜன ஐக்கிய முன்னணி தேர்தலில் வெற்றி பெற்றால், சந்திரிகா குமாரணதுங்காவையேபிரதமர்பதவிக்கு அழைக்க வேண்டும் என அக்கட்சியின் செயலாளர் ஜெயரெட்ணா விடுத்த கோரிக்கைக்கு '' நடைபெறவுள்ள தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி வெற்றி பெற்றால் பிரதமர் பதவிக்கு கட்சித் தலைவர் என்றரீதியில் சிறிமாவோ பண்டாரநாயக்காவே அழைக்கப் படுவார்'' என்ற ஜனாதிபதி செயலகத்தின் அறிக்கை உள்ளது.

இதே சமயம் எக்கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெறமுடியாத நிலை ஒன்று உருவாகுமானால், ஜனாதிபதி பொதுஜனஐக்கிய முன்னணியைத்தான் - கூடுதலான ஆசனங்களைப் பெற்றிருந்தால் கூட-அழைக்க வேண்டும் என்பதல்ல. அவர் ஐ. தே. க. ஒருவரையே பிரதமர் பதவிக்கு நியமிக்கலாம். தமது விருப்பத்திற்கேற்ப அமைச்சரவையையும் தெரிவுசெய்யலாம்ஆனால், இது அரசியலமைப்பிற்கு முரணானது அல்ல என்றாலும், பெரும் நெருக்கடியும் கண்டனங்களையும் டி. பி. விஜேதுங்கா சந்திக்க வேண்டிவரும்.

## அமைச்சரவையும் ஜனாதிபதியும்

அடுத்ததாக அமைச்சரவை ஒதுக்கீடுகள் பற்றியும் ஜனாதிபதி தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரத்தைக் கொண்டுள்ளதால். தற்போது ஜனாதிபதியிடம் இருக்கும் பாதுகாப்பு அமைச்சு, நிதி அமைச்சு என்பனவற்றை எதிரணியிடம் வழங்க அவர் முன்வருவாரா என்பது அடுத்த கேள்வியாகவுள்ளது. அமைச்சரவையின் தலைவர் என்ற ரீதியிலும், அமைச்சரவையில் பங்கு வகிப்பவர் என்ற ரீதியிலும் இவ்வமைச்சுக்களை அரசியல் அமைப்பு ரீதியாக அவர் கைவிட வேண்டும் என்பதல்ல.

முப்படைகளின் தளபதி என்ற நிலையில் இருக்கும் ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சையும் தன்னகத்தே கொண்டிருப்பதன் மூலம், முப்படைகளையும் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கமுடியும். அத்தோடு, இன்றுள்ளதைப் போல் நிதி அமைச்சுப் பதவியையும் அவர் கையாள முற்படின் புதிதாக நியமனம் பெற்றுவரும் அமைச்சரவையின் பொறுப்புகள் அர்த்தமற்றதாக ஆகி விடும் என்பதில் சந்தேகமில்லை.

இவ்வாறாக பொது ஜன ஐக்கிய முன்னணி பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றும் இவ்வாறான தொருநிலை உருவாகுமானால், பொதுஜன முன்னணிஅரசாங்கத்திற்குஐ.தே. கட்சியின் தலைவர் தலைமை தாங்குவாதான ஒரு நெருக்கடியான மறுவளமாக வேடிக்கையான ஆட்சியே சிறிலங்காவில் உருவாகும். இந்நிலையில் பொதுஜனஐக்கியமுன்னணி அரசாங்கமே பெயரளவில் நாட்டில் இருப்பினும் ஐ. தே. க ஆட்சியே நடைபெறும். அதன் கொள்கைகளே அமுலாக்கப்படும்.

இந்த வகையில் பார்க்கும் போது சிறிலங்கா அரசியலமைப்பில் பாராளுமன்றம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் தீர்மானங்களை அமுலாக்கும் ஒரு அமைப்பாகச் செயற்படமுடியுமே ஒழிய அது ஒரு அதிகாரம் கொண்ட அமைப்பாக இல்லை என்றே கூறலாம். ஆகையினால் பொது ஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆசனங்களைப் பெறுமாயின் இது சிறிலங்கா அரசியல் யாப்பிலும் அதற்கு வெளியிலும் பெரும் நெருக்கடிகளை அது ஏற்படுத்துவது தவிர்க்கமுடியாது போகலாம்.

## டி. பி. பதவி விலகுவாரா?

மக்களின் தீர்மானத்திற்கும்-அரசியல் யாப்பிற்கும் இடையில் உருவாகவுள்ளஇந் நெருக்கடியைஎந்தளவிற்கு கொண்டுசென்று விடுவதென்பது ஜனாதிபதி டி பி விஜேதுங்காவைப் பொறுத்ததே; பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளர் பெருமளவில் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டால், அதனை மக்களின் தீர்ப்பெனக் கருதி டி பி. விஜேதுங்கா பதவி விலகிக் கொள்வதே அரசியல் நாகரிகமாகும்.

இதை விடுத்து, தனது பதவிக் காலம் முடிவடைய இன்னமும் நான்கு மாதங்கள் உண்டு என்ற அரசியலமைப்புக்குள் பாதுகாப்புத் தேடிக் கொண்டு பதவியில் நீடிப்பதோடு, பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு

**ஜெயராஜ்**

எதிராக செயற்படுவாரேயானால் அது பெரும்பாலும் மக்களையும் - அரசியல் அமைப்பையும் நேரடியாக மோத வைக்கும் ஒன்றாகவே இருக்கும். இது ஒட்டு மொத்தமாக ஐ. தே. க. விற்கு பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தக் கூடும்.

ஆயினும், முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் கொலையால் எதிர்பாராமல், அதிர்ஷ்ட வசமாக வந்தடைந்த பதவியை ஏறத்தாழ 14 மாதத்திற்குள் டி. பி. விஜேதுங்கா இலகுவில் விட்டு விடுவாரா என்பது சந்தேகமே. ஏனெனில், இதுவே பெரும்பாலும் அவரது முதலும் இறுதியுமான பதவிக்காலமாக இருக்கும் என்பதே அரசியல் அவதானிகளின் உணர்வாகும்.

## மண்டேலா

கூறுவதும், இப்போது நடக்கின்றது. அண்மையில் சுவெட்டோ (Someto) எழுச்சியின் 18 வது வருடாந்த நினைவு கூரல் பொருட்டு யூன் 16-ம் திகதியை பொது விடுமுறையாக்குமாறு பல்வேறு இளைஞர் தொழிற்சங்க அமைப்புக்கள் கோரிய போது பெரும்பான்மையாளர்களுக்கு என்ன தனித்த எதிர்ப்புத்தினம் இப்போது வேண்டியிருக்கின்றது. எனக் கூறி மண்டேலா மறுத்தமை இங்கு குறிப்பிட வேண்டிய செய்தி.

அதேபோலவே தென்னாபிரிக்க நிலைமைகளை அவதானித்து வரும் வரலாற்றாய்வாளர்கள் தற்போதைய மண்டேலாவின் போக்கு அவரை பிற்காலத்தில் சிக்கலுக்குள் மாட்டி விடக்கூடும் எனஅச்சம்தெரிவிக்கின்றனர். 'இதுவரை அவர் முக்கிய தவறுகள் எவற்றையும் இழைக்கவில்லை. ஆனால் முன்னைய நிலைமைகளை அவ்வாறே தொடர்ந்து பேணுவது தான் அவரது குறிக்கோளாக இருந்தால் அவரை ஏன் மக்கள் தெரிவு செய்தார்கள் என்பது குறித்து அவர் தெளிவற்றுள்ளார் என்றே எண்ணத் தோன்றும். ஏனென்றால் புதியதொரு பாதையிலே தென்னாபிரிக்காவை அவர் அழைத்துச் செல்வார் என்றே மக்கள் நம்புகின்றனர்' என்று முக்கிய வரலாற்றாளர் ஒருவர் அண்மையில் குறிப்பிட்டார். எனவே பதவியில் தனது 100-வது நாளை எட்டிவிட்ட மண்டேலாவின் இன்னொரு விடுதலையும் தனது மக்கட்கு பெற்றுக் கொடுக்க வேண்டும். அன்றேல் அவருக்கும் ஏனையோருக்கும் என்ன வேறுபாடு என்று கருத நேரிட்டு விடும். ★

## பாதுகாப்பு

சைக்கிள் ஒன்று கொட்டடியை நோக்கிவிரைந்து கொண்டிருக்கிறது. அதில் பயணித்தவர்கள் இன்னும் ஏக்கத்திலிருந்து முற்றாக விடுபடாத நிலையில போய்க் கொண்டிருக்கிறார்கள். கைக்குழந்தையை மடியில் வைத்துக் கொண்டு பாரில் அமர்ந்திருந்த தமயந்தி கூறினாள்.

''நல்ல காலம், அந்த மனுஷி எங்களுக்கு இடம் விட்டுத்தர மாட்டனெண்டபடியால் தானே நாங்கள் அங்கால போக வேண்டி வந்தது. இல்லையெண்டால் நாங்களும் அந்த இடத்திலையே செத்தோ, காயப்பட்டோ கிடந்திருப்பம்''

''தமயந்தி! அந்த மனுஷி உடனயே செத்துப் போச்சுதாம். கணக்காய் ஷெல் துண்டு வந்து அந்தமேல்மாடி பிளேட்டில பட்டுத் தெறிச்சு மனுஷிக்குப்பட்டிருக்கு நீர் அதிலை பிள்ளையையும் வைச்சுக் கொண்டு கிடந்திருந்தால்... எனக்கு நினைச்சுப் பார்க்கவே என்னவோ செய்யுதப்பா''

என்று அவன் கூறவும், அவளது கைகளுக்குள் சுருண்டு கிடந்த குழந்தை தனது கை, கால்களை ஒருதரம் உதறி அவளை நிலை தடுமாற வைத்தது.

''கொஞ்சம் சிலோ பண்ணுங்கோப்பா''

தமயந்தி சொல்லவும் கால்களை ஊன்றிச் சைக்கிளை நிறுத்தினான் அவளது கணவன். தமயந்தி குழந்தையைத் துவாயினால் போத்திக் கைகளுக்குள் அணைத்துக் கொள்ள முற்பட்ட போது குழந்தை தனது கண்களைத் திறந்து அவளைப்பார்த்துச் சிரித்தது.

''அவருக்குச் சிரிப்பாய்க் கிடக்குது நாங்கள் அவரைப் பாதுகாத்து வளர்த்தெடுக்கப் படுறபாடு அவருக்கென்ன தெரியுது. அவர் சிரிக்கிறார்''

சொல்லிக் கொண்டே குழந்தையின் உச்சியில் தன் உதடுகளைப் பதிக்கிறாள். மீண்டும் சிரிக்கிறது குழந்தை. ★


DIPLOMA IN
COMPUTER PROGRAMMING
**BASIC LANGUAGE**
4 MONTHS
ஆரம்பம்: WEEK DAY 17 - 08 - 94
WEEK ENDS 21 - 08 - 94

LOTUS **1-2-3**
2 MONTHS
ஆரம்பம்: 18 - 08 - 94
Lectures by: S. P. SIVAPATHASUNDARAM
M I D P. M. (Lond)

**BASIC ENGLISH**
பிழையின்றி எழுதவும்,
சரளமாக உரையாடவும்.
ஆரம்பம்: 21 - 08 - 94

**SHORT-HAND & TYPING**
ஆரம்பம்: 15 - 08 - 94
உறுதியான கல்வியைப் பெற
SCHOOL OF BUSINESS
ADMINISTRATION
**16, 3RD CROSS STREET,**
**JAFFNA.**
(சி-10098)



போட்டோ அல்பம் இனாம்

★ கலர் பிலிம் சுருள்களை கழுவி படமாக்கி 30 பிரதிகள் பெற்றால் ஒரு போட்டோ அல்பம் இனாம்
★ கொம்யூட்டர் றபர்சீல் (COMPUTER RUBBER STAMPS)
(இரண்டு வருட உத்தரவாதம)
★ லயின், காவ்ரோன், கலர் புளொக்ஸ் [Line, Half Tone, Colour Blocks]
★ புகைப்பட பிரதியாக்கம் [RE - COPY] மேல் குறிப்பிட்டவற்றைக் குறைந்த செலவில் குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

★ **கொழும்பு கலைக்கூடம்** ★
(கொழும்பு ஸ்ருடியோ)
55, லெப். இளங்கோ வீதி, யாழ்ப்பாணம்.
தொழில் நுட்பத்தில் 35 வருடங்கள் அனுபவம் பெற்றவர்கள்
(சி-10100)



இந்த விளம்பரத்தை பார்க்காதீர்கள்!
ஆனால் வாசியுங்கள் !!!

ஜோ. எகட்டனின் ஜெசித்தாரா நல்லூர், திருவிழாவை முன்னிட்டு விரத சுத்த போசன உணவுப் பார்சல்களை காலை 11.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். தாமதமோ! தடையோ இல்லை.


ரூபா 25/- மட்டுமே

ஜோ. எகட்டனின்
ஜெசித்தாரா உள்ளூர் விருந்தகம்
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை)

கொழும்புத்துறைச் சாலை சுண்டுக்குளி
வழமையான உணவுப் பார்சல்களும்
கிடைக்கும் ரூபா 30/-
புதுயுகத்தில் புது உருவம்
ஜெசித்தாரா
(சி, 10094)


# இரண்டாவது பிறந்த நாள் வாழ்த்து

12.08.94



## செல்வன் கலைவாசன்

அச்சுவேலியைச் சேர்ந்த மா. சிவமூர்த்தி - மஞ்சுளாரஜனி தம்பதிகளின் செல்வப்புதல்வன் கலைவாசன் தனது இரண்டாவது பிறந்ததினத்தை (12-08-94) இன்று தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

இல்லறச் சோலைக்கு சநதோசத் தென்றலாய் வந்த கலைவாசனை அப்பா, அம்மா, தங்கை கலைவாணி, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா குடும்பத்தினர், மாமன்மார், சின்ன அப்பம்மா. சித்தப்பாமார், அத்தைமார், சித்திமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் பல்கலைகளும் பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

கலைவாசன் கலையருவி
வீரகலா ஒளியருவி
(வீடியோ கலாமினி) அச்சுவேலி.

(9069)


நல்லூர் சைவ மகாசபையின் ஆதரவில்
நல்லை முருகன் மஹோற்சவ கால
தெய்வீக அருள் இசைப் பேருரை
சம்பூர்ணராமாயணம்
(உத்தரகாண்டம் வரை)

12. 8. 94 வெள்ளி முதல் நல்லூர் முத்துவிநாயகர் ஆலயத்தில் தினமும் 5.30 மணி.

நல்லைக்குருமணியின் பிரதமவாரிசு கானகதாவாரிதி, அருள்மொழி இசையரசு
கந்தர்மடம் பிரம்மஸ்ரீ
சிவ. வை. நித்தியானந்தசர்மா
அவர்கள் பக்கவாத்தியங்கள் சகிதம் நிகழ்த்துவார்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
- நல்லூர் சைவ மகாசபை

அன்பளிப்பு:
ஸ்ரீ அம்பாள் பலசரக்கு மாளிகை
பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி.
(9077)

யாழ்ப்பாணம் நல்லூர் கிளை நூலகம்

சிங்களவரின் வாக்கால் பதவிக்கு வந்து

# தமிழர் விருப்பத்தை நிறைவேற்றுவது உண்மையான ஜனநாயகம் அல்ல

(கொழும்பு)

உண்மையான ஜனநாயகம் என்பது சிங்கள மக்களுடைய வாக்குப் பலத்தினால் அதிகாரத்துக்கு வந்து ஐந்து இலட்சம் வாக்காளர்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவது அல்ல என சிங்களத் தினசரியான திவயினவில் வெளிவந்த கட்டுரையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெரும்பான்மையினரின் கருத்தை அறியாமலேயே தமிழ் அரசகரும மொழியாக்கப்பட்டது. சாதாரண சிங்கள மக்கள் மூன்று முக்கிய விடயங்கள் தொடர்பாக தீர்வொன்றை நாடியுள்ளனர், அவற்றில் முதலாவது, வடக்கு - கிழக்கு மாகாணங்களை இரு மாகாணங்களாக நிரந்தரமாகப் பிரிப்பது. இரண்டாவது 1991-ம் ஆண்டளவில் இந்தியா விசா பெற்றிருக்கும். சுமார் 1,32,000 மலையகத் தமிழர் திருப்பியனுப்புவது. மூன்றாவது, வடக்கு - கிழக்கு பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டுவருவதாகும், தெற்கின் சிங்கள பயங்கரவாதத்தை ஆட்சியாளர்கள் மிகவும் கடுமையான முறையில் அடக்கி ஒடுக்கினர், எனவே வடக்கின் பயங்கரவாதத்தை தீர்ப்பதற்கு மட்டும் பேச்சுவார்த்தைகள் அவசியமா? எனவும் அக்கட்டுரையில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

### வீரச்சாவு

வீரச்சாவடைந்த 2-வது லெப்டினன்ட் புகழேந்தி/ கஜன் (கண்ணப்பர் கந்தசாமி மட்டக்களப்பு) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

இதேவேளை கடலில் மீன் பிடிக்கச் சென்ற இரு பொது மக்களையும் சிறிலங்கா இராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர்.

### அராலி

வில்லை எனவும் தெரியவருகிறது.

நாகமணி தியாகராசா (வயது 56), தியாகராசா தீபகுமார் (வயது 22) ஆகிய இருவரையுமே காணவில்லை எனவும் இவர்களின் வள்ளம் சரவணை முனங்கு கடற்பகுதியில் ஒதுங்கி நின்றதாகவும் அறியப்படுகிறது. (22)

### வடக்கிற்கு

யுத்தநடவடிக்கையால் பாதிப்படைந்துள்ள பொதுமக்களின் புனர்வாழ்வுக்கென மூன்று மில்லியன் ரூபாபணத்தை அனுப்பியிருந்தது.

இப் பணத்திலிருந்து சிறிய தொகை மட்டுமே யாழ். ஜெய்பூர் நிறுவன செயலகத்தை வந்தடைந்துள்ளது. மீதிப் பணத்தை தெற்கில் உள்ளவர்களின் தேவைக்கு பயன்படுத்திவிட்டதாக இந்த நிறுவனத்தின் கொழும்பு தலைமைக் காரியாலயம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளது.

இதே வேளை இங்கு அனுப்பி வைக்கப்பட்ட சிறிய தொகை பணத்திற்கு பெறுமதியான பொருள்கள் யாழ், அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது அப்பொருள்கள் யாவும் செயற்கை உறுப்புகள் செய்வதற்கு உகந்தவையல்ல என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தி)

### இலக்கிய

ளின் படைப்புகள் தமிழ் நாட்டில் உள்ள பெரும்பான்மையான வாசர்களுக்கு தற்போதுதான் புரிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது. இதேமாதிரியேதான் ஈழத்துபடைப்புகளையும் புரிந்து கொள்வதில்சிரமமாக உள்ளது எனக் கூறினார்.

டானியலின் 'பஞ்சமர்' என்ற நாவலை முதல்தடவை வாசிக்கும்போது தமக்கு புரியவில்லை-என்றும்இரண்டாம் தடவை வாசித்தபோதுஅதன் அற்புதம் புரிந்தது என்றும் அவர் குறிப்பிட்டார். (பஞ்சமர்நூலின் கடைசி எட்டுப் பக்கங்களில் பலசொற்களுக்கு அடிக்கோடிட்டு அல்லது- குறியீடிட்டு விளக்கம் தரப்பட்டுள்ளமைவேறு விஷயம்)

ஆனால் ஈழத்து வாசகர்கள் அனைவரும் ஒரே மூச்சில் ஜெயகாந்தனையும், தோப்பில் முகமது மீரானையும், பூமணியையும்- வாசித் விடுகின்றார்களே இது எப்படி ?

இன்று...... நேற்றுஈழத்தில் இலக்கியம் படைக்கப்படவில்லைஈழத்து இலக்கியத்திற்கு ஒரு பாரம் பரியமே உள்ளது. அப்படிஇருக்கையில் தமிழக வாசகரால் இதைப் புரிந்து கொள்ளமுடிய வில்லையாம்-

எமது படைப்பாளிகளின் அற்புதமான படைப்புக்களுக்கு அடிகோடிட்டு பொருள் விளக்க முனையும் தமிழக சஞ்சிகைகளுக்கு (உ+ம் சப்பாத்து-செருப்பு) நாம்படைப்புகளை அனுப்பி அங்கீகாரத்தைப்பெறவேண்டிய தேவை அப்படிஎன்ன வந்தது?

தமிழ் நாட்டில் இருந்துமட்டும் வெளிவருவதல்ல; தமிழில் எழுதப்படுவதுதான் தமிழ் இலக்கியம். இது உணரப்பட வேண்டும். தமிழில் எமதுபடைப்பாளிகள் இங்கேயே நிறைய படைக்கலாம். படைக்க வேண்டும்

எமது சமகால உணர்வுகளை அந்நியதேசப் படைப்பாளிகள் பதிவு செய்வார்கள் என எதிர்பார்க்க முடியாது.

இந்த உணர்வு நெஞ்சில் தானா எழ வேண்டும்.

# நட்ட ஈட்டு விண்ணப்பம் காலஎல்லை நீடிப்பு

வளைகுடா யுத்தம் காரணமாக குவைத்திலிருந்து நாடு திரும்பியவர்கள் இழப்பீட்டிற்காக இதுவரை விண்ணப்பிக்காதிருந்தால்அவர்கள் எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விண்ணப்பிக்கலாம்.

இழப்பீட்டிற்காக சுமார் 90 ஆயிரம் பேர் ஏற்கனவே விண்ணப்பித்துள்ளனர். ஆயினும் மேலும் பலர் விண்ணப்பிக்க வேண்டியிருப்பதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து ஜெனீவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் நட்டஈட்டுச்சபை இறுதி முறையாகஒரு சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது. மூன்று கட்டங்களாக இவ் இழப்பீடுகள் வழங்கப்படும், புதிய பதிவுகள்பற்றி ஆணைக்குழு நவம்பர் மாதம் பரிசீலனை செய்யும். புதிய விண்ணப்பதாரிகள் விரைவில் தமது படிவங்களை தவிசாளர், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், இல. 97 ஜாவத்தை வீதி கொழும்பு - 05 எனும் முகவரிக்கு அனுப்பலாம்.

# தமிழ்க் குழுக்களின் ஆயுதம் களைவோம்

சு.க. செயலாளர் அறிவிப்பு

(கொழும்பு)

சந்திரிகாவைகொல்ல ஈ.பி.டி.பி. திட்டமிடுகிறது. அவர்கள் அரசியற் கட்சியாக இருந்த போதிலும்மிரட்டல் மூலம் தேர்தலில் போட்டியிடுகிறது என சுதந்திரக் கட்சி பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியமைத்தால்ஈ.பி.டி.பியின் ஆயுதங்களை பறிப்பீர்களா என செய்தியாளர்கள் கேட்டபோது ஈ.பி.டி.பி. யிடம் மட்டுமல்ல எல்லா ஆயுதக் குழுக்களிடமிருந்தும் முன்னாள் எம் பிகளிடமிருந்தும் ஆயுதங்களைக் களைவோம் என அவர் பதிலளித்தார். விடுதலைப் புலிகளிடமிருந்தும் ஆயுதங்களை களைவீர்களா எனக் கேட்கப்பட்டபோது முயற்சிப்பேன் என்றார் தர்மசிறி சேனநாயக்கா.

### உணவகம்

களை விற்பனை செய்ய வேண்டாமென எச்சரிக்கை செய்வதோடு விபத்துக்கள் இடம்பெறாது பொதுமக்கள் திருவிழாக் காலத்தில் அவதானமாக நடந்து கொள்ளுமாறும் விடுதலைப் புலிகளின் மருத்துவ சுகாதார பிரிவின் பொறுப்பாளர் வேண்டுகோள் விடுக்கின்றார்.

### தமிழர்

கூட்டமொன்றில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் பொதுத் தேர்தலில் பொ ஐ. முன்னணி வெற்றி பெற்றால் சந்திரிகா குமாரணதுங்காவை யாழ். அழைத்துச் சென்று புலிகளுடன் பேச வைப்பேன் என தெரிவித்தார்.

### வடக்கு-கிழக்கு

அவர் கூறினார்.

பொ. ஐ. மு. பதவியேற்றால் நாடுதுண்டாக்கப்பட்டுவிடும் என்பதாக காட்டும் இலங்கை வரைபடங்களை கொண்டுள்ள துண்டுப்பிரசுரங்களை ஐ. தே. கட்சி விநியோகித்து வருவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

இந்த தேர்தலில் முன்னணி வெற்றியீட்டினால் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சிகள் எடுக்கப்படும் என்றார்.

புலிகள் பொ. ஐ. முன்னணியுடன் தொடர்புகொண்டார்களா எனக் கேட்டதற்கு இல்லைஎனக் கூறிய சந்திரிகா தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண புலிகளுடன் நிபந்தனைகளற்ற பேச்சுவார்த்தைகள் நடத்த தான்தயார் என்றார்.

புலிகளை நம்புகிறீர்களா என கேட்டதற்கு இது பற்றி கூறவிரும்பவில்லை என தெரிவித்தார் சந்திரிகா.

தமிழர் பிரச்சினை குறித்து புலிகளுடன் நடத்தும் பேச்சு வார்த்தைகளில் ஏனைய தமிழ்க் குழுக்களும் கலந்து கொள்ளுமா? எனக் கேட்டதற்கு, ஆம். ஜனநாயக முறையில் இயங்கும் ஏனைய தமிழ்க் குழுக்களுடன் எங்களுக்கு நல்ல உறவு உண்டு என பதிலளித்தார்.

தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணமுடியும் என்ற நம்பிக்கை திடமாக உண்டு என்றும் அவர் குறிப்பிட்டார்.

சமாதான தீர்வுக்கான முயற்சிகள் தோல்வியடைந்தால், நீங்கள் இராணுவத் தீர்வு காண முயற்சிப்பீர்களா எனக் கேட்டதற்கு,

அரசியல் ரீதியில் சமாதானத் தீர்வு காண்பதுதான் எங்கள் நோக்கம், இதற்காக எங்களாலான எல்லா முயற்சிகளையும் எடுப்போம். இது தோல்வியடைந்தால், ஒரு குறிப்பிட்ட குழு கிராமங்கள் மீதும் மக்கள் மீதும் தாக்குதல் நடத்துவதைப் பார்த்துக்கொண்டு அரசு வாளாவிருக்க முடியாது எனப் பதிலளித்தார்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994. 08. 12 வெள்ளி இரவு

08. 01 - கலைமஞ்சரி - நிகழ்ச்சியில் முதலில் நூல் அறிமுகம். அறிமுகமாவது - ''அக்கரைச் சீமையில்'' நாவல். அடுத்து சிறுகதை- ''அன்னதானம்'' சிறுகதையைத் தொடர்ந்து கவிதை ''சிந்தை தெளிந்திடச் செய்திடுவோம்.''

08. 25 - கணப்பொழுது

08. 30 - செய்திகள்

08. 40 - அரசியல் அரங்கம், லெனினின் மாக்சியமும் யெல்ட்சினின் மாபியாவும்

08. 50 - வாத்திய கானங்கள்.

### 1994. 08. 13 சனி காலை

07. 02 - மாவீர வணக்கம்.

07. 15 - நீங்கள் கேட்டவை.

07. 30 - . செய்திகள்

07. 35 - பத்திரிகைச் செய்திகள்

07. 40 - நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி என்பன இடம்பெறும்.

## 9-ம்மாதநினைவஞ்சலியும் திருவுருவப்படத் திறப்புவிழாவும்



## மேஜர் பூவழகு (விக்கி)

(சண்முகநாதன் விக்னேஸ்வரன் )

நயினாதீவு

மலர்வு : 14-2-1965 வீரச்சாவு : 12-11-1993

அன்னியர் தம் வாய்களை 'அம்மே' என்றலற வைத்து - அவர்
தன்மானத் தமிழ்மண்ணில் அடிபதிக்க அஞ்ச வைக்கும்
''மைன்ட்ஸ்' என்னும் கண்ணிவெடி நுட்பத்தின் நாயகனாய்
தானைத் தலைவனவன் தாள்தன்னைத் தொடர்ந்தவனே
ஒல்லாந்தக் கோட்டையிலே ஒன்பது திங்களின் முன்
பரீட்சார்த்தமுயற்சிதனில் வித்துடலாய்விழுதானாய்.
பூவழகா, பூ அழகுதான் அதைவிடவும் அழகு
போர்ப்பரணி பாடவல்ல நும் போராட்ட வரலாறு.

முக்கிய குறிப்பு:-
9-ம் மாத நினைவஞ்சலியும் திருவுருவப்படத் திறப்பு விழாவும்.

இடம்:- யாழ்- வண்ணை நாச்சியார் கோவில் முன்றல்.
காலம்:- 12-8-1994 (இன்று) வெள்ளிக்கிழமை மாலை 5 மணி.

தமிழீழ மக்கள் அனைவரையும் வருக வருகவென்று மிகவும் பணிவன்போடு அழைக்கின்றோம்;

54, பலாலி வீதி,
கந்தர்மடம். (9080)

-குடும்பத்தினர்
நண்பர்கள்.

# படையினரின் அர்ப்பணிப்பை மறந்து தாயகத்தை கூறுபோட எதிரணிமுயற்சி

## ஆயுதப்படையினருக்கு ஐ.தே.க. செயலர் கடிதம்

(கொழும்பு)

எமது படை வீரர்கள் தமது உயிர்களைத் தியாகம் செய்து தாயகத்தைக் கட்டிக்காத்தது கூறுபோடுவதற்காக அல்ல அவர்களது தியாகங்களையும் அர்ப்பணிப்புகளையும் மறந்து முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து பொதுமக்கள் முன்னணி எல்லை மீளமைப்பு மேற்கொண்டு நாட்டை துண்டாட முனைகிறது என ஐ.தே.க பொதுக் காரியதரிசி சிறிலங்கா ஆயுதப்படையினருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் சுடிதங்கள் பரிமாறியுள்ளனர். தனிநாட்டுக்கான போராட்டத்தில் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் உறுதுணையாக இருப்போமென தெரிவித்துள்ளனர். விடுதலைப் புலிகளின் திருப்திக்கேற்ப வடக்கு-கிழக்கு மாகாணங்களின் எல்லைகள் மீளமைக்கப்படும் என்ற இவர்களது உறுதி முஸ்லிம் காங்கிரசின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிகிறது. இது இலங்கை அரசியலில் ஆபத்தான வளர்ச்சிப் போக்காகும்.

பொதுமக்கள் கூட்டணி முன்வைத்திருக்கும் 'எல்லை மீளமைப்பு' இரு மாகாணங்களையும் ஒரு தாயகமாக்கும் இணைப்புக்கு மட்டுமல்ல, கிழக்கோடு சம்பந்தப்பட்டிருக்கும் திகாமடுல்ல, அம்பாந்தோட்டை மாவட்டங்களைப் பிரிப்பதற்கும் வழிசமைக்கும் என்ற நியாயமான அச்சத்தையும் மக்கள் மனதில் எழுப்பியுள்ளது.

இந்நடவடிக்கை பொதுமக்களுக்கு துயரம் மிகுந்த மாற்ற முடியாத விளைவுகளை ஏற்படுத்தும். எமது கலாசாரத்துக்கு, பாரம்பரியத்துக்கு இது சாவுமணியாக அமையும்.

ஐ தே க. என்றுமே ஆயுதப்படைகளில் நம்பிக்கை வைத்துள்ளது. இதனால் எமது தலைவர்களில் பலர் தமது வாழ்வை இழந்துள்ளனர். எமது தேசிய மனச்சாட்சிக்கு விரோதமாக எமது நாட்டுக்குக் கொள்கைகளை நிர்ப்பந்திக்க பொதுமக்கள் கூட்டணி விரும்புவதை நீங்கள் அறிவீர்கள்.

பொதுமக்கள் கூட்டணியில் நாட்டுக்காக உயிர்துறந்தவர்கள் யார்? அவர்கள் வன்செயல் சகாப்தம் பற்றிப் பேசுகிறார்கள். ஆனால் யாருக்கு எதிராக வன்செயல்கள் பிரயோகிக்கப்பட்டன? சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் சக்திகளுக்கெதிராகவும் ஐ.தே, கட்சி அங்கத்தவர்களுக்கு எதிராகவும் தான் எனவும் அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# கிழக்கில் விரைவில் சர்வசன வாக்கெடுப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைப்பு தொடர்பாக கிழக்கு மாகாணத்தில் மட்டும் விரைவில் சர்வசன வாக்கெடுப்பு மேற்கொள்ளப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் காமினி விஜேசேகரா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ''இசுருபாய'' மண்டபத்தில் நடைபெற்ற செய்தியாளர் மகாநாட்டில் இக் கருத்தை தெரிவித்துள்ளார். வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தொடர்ந்து இணைந்து இருப்பதை ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் விரும்பாது என்றும் அவர் தெரிவித்தார்.

# களனி டயர் கம்பனியை தனியாருக்கு விற்க முயற்சி

(கொழும்பு)

களனி டயர் கம்பனியை தனியாருக்கு விற்க இரகசிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது தற்போது இதற்கு சொந்தமான ஊழியர் வீடுகள், ஊழியர் சங்க அலுவலகம், 5 ஏக்கர் நிலம் என்பன தனியார் வியாபாரி ஒருவருக்கு விற்கப்பட்டுள்ளது.

8-8-94 முதல் 6-9-94 வரை டயர் கூட்டுத் தாபனம் மூடப்படவும் அக்காலகட்டத்தில் ஊழியருக்கு தெரியாமல் கூட்டுத்தாபன கட்டடங்கள் என்பவற்றை விற்றுவிட நிர்வாகம் திட்டமிட்டுள்ளதாக சிங்கள தினசரியான லக்திவ செய்தி வெளியிட்டுள்ளது.

## வருடாந்த மகோற்சவம்

நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோவில் கொடியேற்ற வைபவம் இன்று பகல் 12-05 நிமிட நேரமளவில் நடைபெறவுள்ளது எதிர்வரும் 20-ந்திகதி ரதோற்சவம் நடைபெறும்.

## தெய்வீக இசையரங்கு

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு நாவலர் மணிமண்டப முன்றலில் தினமும் மாலை 6 மணி தொடக்கம் 10 மணிவரை நடைபெறும் தெய்வீக இசையரங்கில் இன்று கே. ஆர். சுந்தரமூர்த்தி குழுவினரின் மங்கள இசையும் சுபகணேசசுந்தரத்தின் கதாகாலட்சேபமும் நடைபெறவுள்ளது.

## ஆகஸ்ட் வேதனம்

பலாலி ஆசிரிய கலாசாலை மாணவர்களின் ஆகஸ்ட்மாத வேதனத்தை இன்று வந்து பெற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

## உயர்தர பரீட்சை வினாத்தாள் திருத்தம்

(கொழும்பு)

முதலாவது தொகுதி, க. பொ. த. (உ/த) பரீட்சை வினாத்தாள்களை திருத்தும் பணி எதிர்வரும் 24-ந் திகதி ஆரம்பமாகும். சுமார், 3500 ஆசிரியர்கள் இப்பணியில் ஈடுபடுவர். இவர்களுக்கான விசேட பயிற்சி 22, 23-ந் திகதிகளில் கொழும்பில் நடைபெறுமென பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இரண்டாவது கட்டப் பரீட்சைகள் 22-ந் திகதி ஆரம்பமாகி செப்டம்பர் மாதம் முதலாம் திகதி முடிவடையும்.

## அவசர கூட்டம்

தென்மராட்சி பிரதேச செயலக கிராம அலுவலர்கட்கு முக்கியமான கூட்டம் ஒன்று இன்று மு ப. 9 மணிக்கு பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

## பொதுசன உதவிப்பணம்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவால் வழங்கப்படும் ஜூலை மாதத்திற்குரிய பொதுசன மாதாந்த உதவிப்பணம் தற்போது இப்பிரிவுக்கு உட்பட்ட சகல உப தபால் அலுவலகங்களிலும் வழங்கப்பட்டு வருகிறது. (24)

## பரீட்சை விண்ணப்பம்

(கொழும்பு)

இலங்கை அதிபர் சேவையின் 1ம், 2ம், 3ம் தரங்களிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன் காண் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 31-ம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என கல்விச்சேவை சபை அறிவித்துள்ளது.

சிறிலங்கா கல்வி நிர்வாக சேவை அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுத்திகதியும் இம்மாதம் 31-ம் திகதியாகும். மேலதிக விபரங்கள் இம்மாதம் 5-ம்திகதிவர்த்தமானியில் வெளியாகியுள்ளன.

# பிரச்சினை தீர்க்காவிடின் தமிழீழ அரசு பிரகடனம்

## ரெலோ, புளொட், ஈரோஸ் அறிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் முடிவடைந்து பதவிக்குவரும் அரசாங்கம் நூறு தினங்களில் தமிழர் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்காதுவிட்டால் தாம் சுதந்திர தமிழீழ அரசாங்கம்ஒன்றைப் பிரகடனம் செய்யப்போவதாக தமிழ் தேசிய ஐக்கிய முன்னணி தெரிவித்துள்ளது.

ரெலோ, புளொட் ஈரோஸ் ஆகியன கூட்டாக அமைந்த இவ்வமைப்பு திருகோணமலையில் வைத்து இக்கருத்தை தெரிவித்துள்ளதாகவும் மேலும் தெரியவருகின்றது.

## ரணில் மறுப்பு

(கொழும்பு)

சந்திரிகா தம்மைக்கொல்ல அரசு ஈ பி.டி.பியை அமர்த்தியுள்ளதாக கூறும் குற்றச்சாட்டிற்கு எவ்வித ஆதாரத்தையும் அவர் வழங்கவில்லை என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சந்திரிகாவிற்கு அரசு பாதுகாப்பு வழங்குவதாகவும் சந்திரிகா முன்பும் ஒரு தடவை இவ்வாறு குற்றஞ்சாட்டிய போது அதை விசாரிக்க சி.ஐ.டி பொலிசார் அவரிடம் சென்றபோது அவர்களை சந்திரிகா சந்திக்க மறுத்துவிட்டதாகவும் பிரதமர் ரணில் மேலும் தெரிவித்தார்.

இதே வேளை இக்குற்றச்சாட்டு பொய்யானது என ஈ.பி டி.பி மறுத்துள்ளது-

## தொற்றுநோய் அபாயம்

(நல்லூர்)

யாழ். வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ள தாராக்குளம் வீடமைப்புத்திட்ட வளவில் இருக்கும் மலகூடக் குழியிலிருந்து வெளிவரும் கழிவுநீர் ஆஸ்பத்திரி வீதி வடிகாலில் வந்து விழுவதனால் இப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளார்கள். இதனால் தொற்றுநோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. (17)

## வாக்காளர் அட்டை தேவையில்லை

(கொழும்பு)

வடக்கில் உள்ள வாக்குச்சாவடிகளில் வாக்காளர் அட்டை, தேசிய அடையாள அட்டை இல்லாவிடினும் வாக்களிக்கலாம் வாக்காளர் இடாப்பில் பெயர் இருந்தால் போதுமானது என தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

வடக்கில் தேர்தல் நடத்தப்படுமென்பதில் எவ்வித மாற்றமும் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

## கொலை முயற்சி

முன்னாள் சுதந்திரகட்சியின் கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜெயராஜ் பர்ணான்டோபிள்ளையை நேற்று மினுவாங்கொடையில் வைத்து கொலை செய்ய எடுத்த முயற்சி தோல்வியடைந்துள்ளதாக கூறப்படுகிறது.

போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சரும் அவரின் ஆதரவாளர்களும் வேகமாக வாகனமொன்றில் வந்து இவரின் வாகனத்துடன் மோதியதாகவும் இதில் இருந்து அவர் தப்பியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்,

## கலைப்பீட பரீட்சை பிற்போடப்படும்

யாழ் பல்கலைக்கழகஉள்வாரி மாணவர்களது கலைப்பீடப் பரீட்சைகள் யாவும் மேலும் பிற்போடப்படவுள்ளதாக யாழ். பல்கலைக்கழக பதிவாளர் திரு. க. பரமேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பான இறுதி முடிவுகள் இம்மாதம் பதினேழாம் திகதி நடைபெறவுள்ள மூதவை கூட்டத்தில் மேற்கொள்ளப்படும்.

இதே வேளை உள்வாரி மாணவர்களது கலைப்பீடப் பரீட்சைகள் யாவும் முடிவுற்ற பின்னரே வெளிவாரி மாணவர்களது பரீட்சைகள் நடாத்த தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (05)

## வடக்கு

வழிகோலும் எனவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

சிறிலங்காவின் சிங்களக் கட்சிகளில் எதுவென்றாலும் ஈழத்தை ஏற்றுக்கொண்டால் இலங்கைதுண்டுபோடப்பட்ட நாடாகும் எனவும், எல்லைகள் தென்பகுதி நோக்கி தள்ளப்படும் எனவும் புலிகள் முழுமையான ஆயுதபலம் உள்ளவர்கள் எனவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

தமிழீழம், தன்னாட்சியும் இறைமையும் பெற்றுக்கொண்டு வருவதால் சிறிலங்காவின் ஆயுதப் படைகள் அதனுள் ஆக்கிரமித்துச்செல்ல சர்வதேச சமூகம் அனுமதிக்காது. சிறிலங்காவின் தேய்வில் தமிழீழம் விரிவாக்கம் அடைந்து வருகின்றது எனவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

தேர்தலில் நீங்கள் வாக்களிக்கப்
போவதில்லைத்தான். ஆனால்,
தேர்தலிற்கு முன் நீங்கள்
வாசித்து விட வேண்டும் என்பதற்காக
அவசரமாக எழுதப்பட்ட
இச்சிறு நூலையுமா வாசிக்காமல்
விடப் போகிறீர்கள்?

அரசியலமைப்பு

ஜேயாரால் ஜேயாருக்காக ஜேயாருடைய

மு. திருநாவுக்கரசு எழுதியது

(9081)

## மரண அறிவித்தல்

### திரு.கதிரவேலு முருகேசு

தம்பசெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு கதிரவேலு முருகேசு 11-8-94 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும், மனோன்மணி (கக்சுயின் பல்கலைக் கழகம், யப்பான்), கமலமணி, தயாபரன் (சுங்கத் திணைக்களம்) ஆகியோரின் அன்புத் தந்தையும். பேராசிரியர் சண்முகதாஸ் (யாழ். பல்கலைக் கழகம்), திரு. விக்கினேஸ்வரன், திருமதி வசந்தி (இலங்கை வங்கி, கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனும், திருமதி கலைச் செல்வி குகசிறீ (அவுஸ்திரேலியா), திருமதி திருநங்கை ஞானசபேசன், திரு. ச. செந்தூரன் (லண்டன்), செல்வி வி. சர்மினி, செல்வன்கள் த. ஆதவன், த. சிறீரமணன் ஆகியோரின் அன்புப் பேரனும், [செல்வி ஞா. சேந்தினியின் அன்புப் பாட்டனுமாவார். ஈமக்கடன்கள் இன்று (12-08-1994) மாலை 3.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனத்துக்காக கொக்குவில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்,

அம்பலவாணர் பாதை,
பலாலி வீதி,
திருநெல்வேலி.

தகவல்:
பேராசிரியர் அ. சண்முகதாஸ்
(மருமகன்)

(9083)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது